விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 187 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 09 சனிக்கிழமை (24.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## பிரபாகரனுக்கு என்ன நடந்தது என்பதை அரசு மூடி மறைக்கிறது

### சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இறுதி யுத்தத்தின்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு என்ன நடந்தது என்ற விடயத்தை அரசாங்கம் நாட்டின் தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் மூடி மறைத்து முழுப் பொய்களை சொல்லி வருகின்றது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

பிரபாகரனின் பிரேத பரிசோதனை 15

## சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தொடர்பில் முறைப்பாடுகள்

### யாழ்.அரச அதிபர் சிவபாலசுந்தரன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பணியாற்றுகின்ற சில சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தொடர்பில் தனக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி 15

## தமிழ் அரசியல் கைதி ஒருவர் விடுதலை

(கொழும்பு)

இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவரும் நீண்டகாலமாக புதிய மகசின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த தமிழ் அரசியல் கைதியுமான 66 வயதுடைய கனகசபை தேவதாசன் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

புறக்கோட்டை ரயில் நிலையத்தில் கடந்த 2008ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தற் 15

## மனித புதைகுழி தொடர்பான ஆவணங்களை கோட்டா அழித்துவிட்டார்!

### சர்வதேச மனித உரிமைகள் குழு குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் மனித புதைகுழி தொடர்பான ஆவணங்களை கோட்டாபய ராஜபக்ஷ திட்டமிட்டு அழித்து விட்டதாக சர்வதேச மனித உரிமைகள் குழு குற்றஞ் சாட்டியுள்ளது.



இலங்கையில் 1988-89 கால கட்டத்தில் நிகழ்ந்த மார்க்சிஸ்ட் கிளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு காலகட்டங்களில் நிகழ்ந்த மோதல்களில் பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஆங்காங்கே கொத்துக் கொத்தாக 02

## கொழும்பில் நேற்றும் ஒருவர் சுட்டுக்கொலை



(கொழும்பு)

இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கம்பஹா மாவட்டம், திவுலப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பிரதேசத்தில் மசாஜ் நிலையத்தை நடத்தி வரும் நபரே சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஒரு பிள்ளையின் தந்தையான 28 15

## இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு ஐக்கிய நாடுகள் சபை முழு ஆதரவு

### பொதுச் செயலாளர் குட்டரெஸ்



(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் கடன் முயற்சிகளுக்கு ஐக்கிய நாடுகள்சபை முழு ஒத்துழைப்பு வழங்கும் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் அன்டோனியா குட்டரெஸ் 02

## டைட்டானிக் பார்க்க நீர்மூழ்கி கப்பலில் சென்ற ஐவரும் உயிரிழப்பு



14ஆம் பக்கம் பார்க்க

### சுதந்திர தின போராட்ட வழக்கு

## மன்றுக்கு வருகை தராதவர்களுக்கு நீதிமன்றம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் சுதந்திர தினத்திற்கு எதிராக கடந்த பெப்ரவரி 4ஆம் திகதி போராட்டம் நடத்தியமைக்கு எதிராக பொலிஸாரால் தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணையை எதிர்வரும் செப்ரெம்பர் 9ஆம் திகதிக்கு ஒத்திவைத்த யாழ். நீதிமன்றம், சமுகமளிக்காத பிரதிவாதிகளுக்கு எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

குறித்த வழக்கு கட்டளைக்காக நேற்றைய தினம் எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேகநபர் 15

### பொலிஸாரை மிரட்டி

## சாரதியையும் டிப்பரையும் கடத்தி சென்ற மணல் கடத்தல் குழு

### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் மணல் கடத்தலில் ஈடுபட்ட டிப்பர் வாகனத்துடன் ஒருவரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்து அழைத்து வரும் போது, மற்றொரு மணல் கடத்தல் குழு வீதியை மறித்து, கைது செய்யப்பட்ட நபரையும், டிப்பர் வாகனத்தையும் கடத்திச் சென்ற அதிர்ச்சி சம்பவம் நடந்துள்ளது.

கிளிநொச்சி அக்கராயன் வீதியிலுள்ள 15

## பிரதமர் பதவிக்கு மகிந்த போட்டியிட மாட்டார்

### லொஹான்

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு விரைவில் இடமாற்றம் - டக்ளஸ்

யாழ். மாவட்டத்தில் பணியாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு உரிய காலப்பகுதியில் இடமாற்றத்தை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கடற்தொழில் அமைச்சரும் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவருமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற யாழ் மாவட்ட சமுர்த்தி தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்தினால் வழங்கப்படும் வேலைவாய்ப்புக்களில் பணி இடமாற்றங்கள் வழங்கப்படுவது நடைமுறையாக உள்ள நிலையில் அதனை யாரும் மீறக்கூடாது.

யாழ். மாவட்டத்தில் பத்து அதற்கு மேற்பட்ட வருடங்கள் இடமாற்றங்கள் வழங்கப்படாத சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஒரே பிரதேசத்தில் கடமையாற்றுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது.

அது மட்டும் அல்ல அது சில உத்தியோகத்தர்கள் அருகருகே உள்ள பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் வழங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான நிலையில் உரியவர்கள் தலையீடு செய்து சரியான இடமாற்றங்களை ஒரு மாத காலத்துக்குள் செய்ய வேண்டும்.

மேலும் சில உத்தியோகத்தர்களின் சேவை அப் பிரதேசத்திற்கு அவசியம் என கருதினால் மாவட்ட செயலகத்துடன் கலந்துரையாடி தீர்வுகளை எட்ட முடியும் என தெரிவித்தார். (4,7,104)

# கொழும்பில் தமிழர் ஒருவர் வெட்டிப் படுகொலை

கொழும்பில் தமிழர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு, கொலன்னாவைப் பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான 45 வயதுடைய சுப்பிரமணியம் தயாபரன் என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் முகமூடி அணிந்து வந்த இருவர், கூரிய ஆயுதத்தால் அவரைச் சரமாரியாக வெட்டிவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

இரத்த வெள்ளத்தில் கிடந்த அவரை அயலவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும் அவர் உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடுக்கல் - வாங்கல் விவகாரமே இந்தக் கொலைக்குக் காரணம் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதையடுத்துக் கொலையாளிகளைத் தேடும் நடவடிக்கையில் பொலிஸார் களமிறங்கியுள்ளனர். (4,7)

# ஆவணங்களை...

புதைக்கப்பட்டுள்ளனர். கட்டுமான பணிகளின் போது இந்த புதைகுழிகள் வெளிப்பட்டதையடுத்து, அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதைகுழிகள் தோண்டப்பட்டன.

குறிப்பாக 2013ஆம் ஆண்டு மத்திய இலங்கையின் மாத்தளை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணிகளில் 155 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மன்னார் மாவட்டத்தில் உள்ள ஒரு இடத்தில் 81 உடல்களும், மற்றொரு இடத்தில் 318 எலும்புக்கூடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்நிலையில், இலங்கையில் மோதல்கள் நடந்த பல்வேறு காலப்பகுதியைச் சேர்ந்த மனித புதைகுழிகளை இலங்கை அரசு எவ்வாறு கையாண்டது? என்பது தொடர்பாக புள்ளி விவராங்களுடன் சர்வதேச மனித உரிமைகள் குழு ஆய்வறிக்கை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் உள்ள பெரிய 'மனித புதைகுழிகளும் வெற்றியடையாத அகழ்வுகளும்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இந்த ஆய்வறிக்கையில், இலங்கை முழுவதிலும் இன்னும் ஆயிரக்கணக்கான சடலங்கள் புதையுண்டு கிடப்பதாக கூறியதுடன், மனித புதைகுழிகள் தொடர்பான பொலிஸ் ஆவணங்களை அப் போதைய இராணுவ அதிகாரியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ அழித்திருப்பதாக குற்றம்சாட்டி உள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது, அகழ்வு பணிகளில் உள்ள பெரிய பிரச்சினை, அதில் உள்ள அரசியல் தலையீடு ஆகும். அரசியல் தலையீட்டின் பிரதான உதாரணமாக அப்போதைய பாதுகாப்பு செயலாளரான கோட்டாபய ராஜபக்ஷவின் நடவடிக்கைகை குறிப்பிடலாம்.

அவர் மாத்தளை மாவட்டம் உட்பட மத்திய மாகாணத்திற்கு உட்பட்ட அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் இருந்த ஐந்து வருடத்திற்கு முந்தைய கால கோப்புகள் அனைத்தையும் அழித்துவிடுமாறு உத்தரவிட்டதாக கூறப்படுகிறது.

எனவே, சர்வதேச சட்டத்தின்படி கோட்டாபய ராஜபக்ஷ மீது இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (4,7)

மணிவிழா நாயகியை
மனதார வாழ்த்துகின்றோம்
யா/கொழும்புத்துறை
சென்.ஜோசப் வித்தியாலயம்
திருமதி ஜெயந்தினி சிவபாதம் (SLTS-I)
B.A, பட்டப்பின் கல்வி டிப்ளோமா,
பயிற்றப்பட்ட ஆசிரியர் (விஞ்ஞானம்)
சேவைக்காலம்
1. யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 1988.04.06 - 1989.12.31
2. யா/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 1990.01.01 - 1991.12.31
3. யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 1992.01.01 - 1993.12.31
4. யா/நாவற்குழி மகா வித்தியாலயம் 1994.01.01 - 1994.12.31
5. யா/சென்.மேரிஸ் வித்தியாலயம் 1995.01.01 - 2010.02.23
6. யா/சென்.ஜோசப் வித்தியாலயம் 2010.02.24 - 2023.06.23
விஞ்ஞானக் கல்விதனை
விருப்புடனே கற்பித்து
கல்விச்சாலை தன்னில்
கண்துஞ்சா சேவையாற்றி
பணிநிறைவு காணும் இந்நாளில்
மணிவிழாக் காணும்
ஆசிரியப் பெருந்தகை அவர்கள்
செல்வங்கள் பல பெற்று
பல்லாண்டு வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

Best Wishes!
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/சென்.ஜோசப் வித்தியாலயம்
(15064)

# இலங்கையின்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளார்.

பிரான்ஸின் பரிஸ் நகரில் நடைபெறுகின்ற "புதிய உலகளாவிய நிதி ஒப்பந்தம்" தொடர்பிலான உச்சி மாநாட்டிற்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் நாயகம் அண்டோனியா குட்டரெஸ் ஆகியோருக்கு இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போதே மேற்கண்டவாறு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் புதிய பொருளாதார மறுசீரமைப்பு முயற்சிகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளின் முன்னேற்றம், பொருளாதார மீட்சிக்கான செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் நாயகத்திடம் தெளிவுபடுத்தினார்.

நிலையான பொருளாதார கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் போதும் நீண்ட கால பொருளாதார வேலைத் திட்டங்களை முன்னெடுகின்றபோதும் வலுவான நிதிக்கட்டமைப்பொன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் அர்ப்பணிப்புடனான முயற்சிகள் பற்றியும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

நிலையான அபிவிருத்தி இலக்குகளை மேம்படுத்தும் அதேநேரம் காலநிலையினால் ஏற்படக்கூடிய மோசமான பாதிப்புக்களை மட்டுப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படவுள்ள நீடிக்கப்பட்ட உபாய மார்க்க திட்டங்களை எடுத்துக்காட்டி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பரிந்துரைக்கமைய முன்னெடுக்கப்படும் "காலநிலை சுபீட்சத்துக்கான திட்டமிடல்" தொடர்பிலும் செயலாளர் நாயகத்திற்கு விளக்கமளித்தார். (4-7)

## பெயர் மாற்ற அறிவித்தல்

மந்துவில் வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த **கிருஸ்ணசாமி சரசப்பிள்ளை** ஆகிய நான் 24.06.2023 இன்று முதல் எனது பெயரை **சரஸ்வதி** எனப் பெயர் மாற்றம் செய்கின்றேன். இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் மேற்குறித்த பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
(16075) திருமதி கிருஸ்ணசாமி சரஸ்வதி

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோட்டைக்காடு மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறும் மஹோற்சவத்தில்எதிர்வரும் யூலை மாதம் 4 ஆம் திகதி தேர் திருவிழாவும், 5 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும், 6 ஆம் திகதி பூங்காவனமும் நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (4,7)

Hybrid International Hub (pvt) Ltd Jaffna
இந்தியா விசா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான tour விசாக்கள் தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.
(C-6806)
Hybrid International Hub (pvt) Ltd, Jaffna
076 250 0098, 021 222 1265

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் பேரவையில் இருந்து இலங்கை ஒதுங்க இடமளிக்கப்படாது

## உறுதி வழங்கியது அமெரிக்கா

(ஜெனிவா)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கண்காணிப்பு பொறிமுறையில் இருந்து இலங்கை விலகுவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று அமெரிக்கா உறுதியளித்துள்ளது.**

உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சின் போது, உலகளாவிய குற்றவியல் நீதிக்கான துணைச் செயலாளர் அம் பெத் வான் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அழைப்பின் பேரில் உலகத் தமிழர் பேரவை பிரதிநிதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் தொடர்பில் இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளன.

சுமார், ஒரு வருடத்திற்கு முன்னர் இதே போன்ற உலகத் தமிழர் பேரவையினரை அழைத்து இராஜாங்கத் திணைகளம் நடத்திய கலந்துரையாடல் இது என்பதால், இக்காலப்பகுதியில் இலங்கையில் ஏற்பட்டிருக்க கூடிய மாற்றங்கள், முன்னேற்றங்கள் குறித்து சந்திப்பில் தீவிரமாக ஆராயப்பட்டன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் தீவிரமாக எடுக்கப்பட்டு ஒரு தசாப்த காலத்திற்கு அதிகமாகி விட்ட நிலையில், அது பேரவையின் பிரதான நிகழ்ச்சி நிரலில் இருந்து ஒதுக்கப்பட்டுவிடக்கூடிய அபாயம் குறித்து தமது கவலையை உலகத் தமிழர் பேரவையினர் வெளிப்படுத்தியிருந்தனர்.

இவ்விடயத்தை மனித உரிமை பேரவைக்கு கொண்டு வந்ததில் அமெரிக்காவே முன் நின்று பங்காற்றியதென்ற வகையில், அதன் தற்போதைய நிலைப்பாடு என்ன என்பது தொடர்பிலும் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதில் அளித்த உலகளாவிய குற்றவியல் நீதிக்கான துணைச் செயலாளர் அம் பெத் வான், மனித உரிமைகள்பேரவையில் இலங்கை விவகாரம் ஒதுக்கப்படுவதற்கு அமெரிக்க அனுமதிக்காது என்று தெரிவித்துள்ளார்.

இதன்போது, இலங்கை மீதான பொறிமுறை ஐ.நாவில் தொடர்வதை அமெரிக்கா உறுதிப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையின் பொருளாதாரம் திடமான நிலையில் அடைவதாயின், அங்கு அரசியல் நிலை சுமுகமானதாக இருக்க வேண்டும்.

அதற்கு ஈழ தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று உலகத்தமிழர் பேரவை பிரதிநிதிகள் இச்சந்திப்புகளின் போது வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் அரசியல் தீர்வை கொண்டு வருவதற்குமான எந்த ஒரு முயற்சிக்கும் அமெரிக்கா தனது முழுமையான ஆதரவை வழங்கும் என்று இராஜாங்கத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசியலமைப்பில் உள்ள 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது அரசியல் தீர்வை நோக்கிய பயணத்திற்கான ஆக்கபூர்வமான முதல் படியாக அமையும் என்று அமெரிக்கா கருதுவதாகவும் இச்சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இராஜாங்க திணைக்களத்தின் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் டொனாட் லூ, உலகளாவிய குற்றவியல் நீதிக்கான துணைச் செயலாளர் அம் பெத் வான், தேசிய பாதுகாப்புச் சபையின் இலங்கை, நேபாளம் மற்றும் மாலைதீவுக்கான பணிப்பாளர், செனட்டின் அயலுறவுத்துறை குழு அலுவலகத்தின் மூத்த பணிநிலை பணிப்பாளர், அமெரிக்க காங்கிரஸின் அயலுறவுத் துறை அலுவலகத்தின் மூத்த பணிநிலை பணிப்பாளர் ஆகியோருடன் இந்த சந்திப்புகள் இடம்பெற்றுள்ளன. (நி)

# உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள பல்கலை. மாணவர்கள்

## பாராளுமன்றத்தில் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

நாட்டில் தற்போது பல்கலைக் கழக மாணவர்கள் அதிகளவில் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் இப்பிரச்சினை தொடர்பாக கல்வி அமைச்சு விசேட கவனம் செலுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே கல்வி அமைச்சரிடம் இதனை வலியுறுத்தினார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "நிறைவடைந்த ஐந்தரை மாத காலப்பகுதியில் மாத்திரம் பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் ஐவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள்.

ஆகவே இப்பிரச்சினைக்கு தீர்வு காண கல்வி அமைச்சு விசேட கவனம் செலுத்த வேண்டும். பேராதனை பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களில் பெரும்பாலானோர் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பெரும்பாலான மாணவர்கள் ஒருவேளை தான் உணவு உண்கிறார்கள்.

மாணவர்களின் செலவுகளுக்கு பணம் அனுப்ப முடியாத நிலையில் அவர்களின் குடும்பம் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் உடல் ரீதியில் பாதிக்கப்பட்டு, உடல் மெலிந்துள்ளார்கள். விரிவுரைகளின் போது மாணவர்கள் மயங்கி விழுகிறார்கள்.

இந்த பிரச்சினையின் பாரதூரத்தன்மையை விளங்கி துரிதகரமாக ஒரு தீர்மானத்தை எடுக்க கல்வி அமைச்சு தலையிட வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# ஜூன் 30 வங்கி விடுமுறை

(கொழும்பு)

எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதி சிறப்பு வங்கி விடுமுறையாக அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 1971 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விடுமுறைச் சட்டத்தின் பிரிவு 10(1) மூலம் பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் இதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. (நி)

# உள்ளூர் கடனை மறுசீரமைப்பது ஆபத்தானது

## பேராதனை பல்கலை.பேராசிரியர் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டின் உள்ளூர் கடனை மறுசீரமைப்பது என்பது, சமூக பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதன் காரணமாகவே நாட்டின் பொருளாதாரம் சுருங்கி வருவதாகவும் பேராசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் தற்போதைய மொத்த கடன் தொகை கிட்டத்தட்ட 92 பில்லியன் டொலர்கள்.

அதில் 47 பில்லியன் டொலர்கள் உள்நாட்டுக் கடனாகவும், 36 பில்லியன் டொலர்கள் வெளிநாட்டுக் கடனாகவும் உள்ளன.

அரசாங்கமும் மத்திய வங்கியும் இந்த உள்நாட்டுக் கடனை ஏதோ ஒரு வகையில் விரைவாக மறுசீரமைக்கப் போகிறது.

இந்த நாட்டு மக்களின் பணத்தில் ஒருதொகையை ஏதாவது ஒரு வகையில் வெட்டினால், சமூகத்தில் சமூக பொருளாதார பாதிப்பு கண்டிப்பாக ஏற்படும்.

மேலும் கடுமையான முறையில் மக்களை பாதிக்க வாய்ப்பு உள்ளது. ஏனெனில் பொருளாதாரம் சுருங்குகிறது என அவர் தெரிவித்தார். (நி)

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரான்ஸில் போராட்டம்



ரணில் விக்கிரமசிங்கவின் பிரான்ஸ் வருகைக்கு எதிராக இலங்கை ஜனாதிபதி பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் தமிழீழ மக்கள் பேரவை ஆகியவற்றின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் போராட்டம் இடம்பெற்றது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் முதல் தடவையாக கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி ஓகஸ்டில் ஆரம்பம்



ரிட்ஸ்பறி சேர் ஜோன் டாபட் கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டி வரலாற்றில் முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் முதல் சுற்று கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளை ஓகஸ்ட் மாதம் நடத்துவதற்கு இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் சங்கமும் சி.பி.எல். நிறுவனமும் முன்வந்துள்ளன.

குறித்த மெய்வல்லுநர் சுற்று தொடர்பினை தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பு தாஜ் சமுத்ராவில் நடைபெற்றபோதே இந்தத் தகவல் வெளியிடப்பட்டது.

பிற மாவட்டங்களில் போட்டிகள் நடத்தப்பட்டதால் கடந்த காலங்களில் போக்குவரத்து சிரமங்கள் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாண மாணவர்களின் பங்கேற்பு குறைவாக இருந்தது.

இதற்கமைய, இந்த வருடம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வடக்கு, கிழக்கு மாணவர்கள் பங்குபற்றும் வகையில் கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிக்கான நான்கு கட்ட முதல் சுற்றுப் போட்டிகளில் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சி.பி.எல். புட்ஸ் இன்டர்நெஷனல் பிறைவேட் லிமிட்டெட்டின் சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் நிறுபுல் டி சில்வா தெரிவித்தார்.

இப்போட்டி ஓகஸ்ட் 10ஆம், 11ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் பெருவாரியாக பங்குபற்றவுள்ளனர். (6)

# ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் இரு அணிகளுக்கும் அபராதம்

இங்கிலாந்துக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையில் பேர்மிங்ஹாம் எஜ்பெஸ்டன் விளையாட்டரங்கில் நடைபெற்ற முதலாவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் மந்தகதியில் ஓவர்கள் வீசப்பட்டதற்காக இரண்டு அணிகளுக்கும் போட்டி கட்டணத்தில் 40 வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன் தலா 2 ஐ.சி.சி டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகளும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் ஓவர்களை வீசுவதற்கு ஒதுக்கப்பட்ட மேலதிக நேரம் உட்பட நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் இரண்டு அணிகளும் தலா 2 ஓவர்கள் குறைவாக வீசியிருந்ததாக போட்டி பொது மத்தியஸ்தர் அண்டி பைக்ரொவ்ட் தீர்மானித்து இந்த அபராதங்களை விதித்தார்.

இதற்கு அமைய முதலாவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலியாவுக்கு 12 ஐ.சி.சி டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகளில் 2 புள்ளிகள் கழிக்கப்பட்டுள்ளதுடன், இங்கிலாந்துக்கு 2 எதிர்மறை புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளது. (6)

# உலகக்கிண்ண போட்டிகள் இடம்பெறும் மைதானத்தில் தீ விபத்து



ஜிம்பாப்வேயில் ஐ.சி.சி உலகக் கிண்ண தகுதிச் சுற்று போட்டிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் போட்டிகள் நடைபெறும் மைதானத்தில் ஒன்றான ஹராரே ஸ்போர்ட்ஸ் கிளப்பில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

உலகின் பழைமையான கிரிக்கெட் மைதானங்களில் ஒன்றான ஹராரே ஸ்போர்ட்ஸ் கிளப் வளாகத்தில் பெரும் தீ விபத்து ஏற்பட்டதால் ரசிகர்கள் கவலையடைந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த போட்டியில் நெதர்லாந்திற்கு எதிராக ஜிம்பாப்வே 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, மைதானத்தின் தெற்கு முனையில் இந்த தீ விபத்து ஏற்பட்டது.

விபத்து குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டது. மேலும் 3இற்கும் அதிகமான குரூப் போட்டிகள், சுப்பர் சிக்ஸ் போட்டிகள் மற்றும் ஐ.சி.சி உலகக் கிண்ண தகுதிச் சுற்றின் இறுதிப் போட்டிக்கு இந்த மைதானம் பயன்படுத்தப்படுமா என ஆய்வுக்குப் பிறகு தெரிய வரும். (6)

# அயர்லாந்தை வீழ்த்திய ஸ்கொட்லாந்து



13ஆவது ஒருநாள் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் தகுதிச் சுற்றுப் போட்டிகள் தற்போது, ஜிம்பாப்வேயில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில், நேற்று முன்தினம் நடைபெற்ற குழு 'பி'பிரிவின் 8 ஆவது போட்டியில், ஸ்கொட்லாந்து மற்றும் அயர்லாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

புலவாயோ மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கொட்லாந்து அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்துக் கிரிக்கெட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 286 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதனைத்தொடர்ந்து 287 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ஸ்கொட்லாந்து அணி, 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இந்த வெற்றியின் மூலம் குழு 'பி' பிரிவில் ஸ்கொட்லாந்து கிரிக்கெட் அணி 2 புள்ளிகளுடன் தரவரிசைப் பட்டியலில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, ஸ்கொட்லாந்து அணிசார்பில், 61 பந்துகளில் 4 சிக்ஸர்கள் 9 பவுண்ரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 91 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட மைக்கேல் லீஸ்க் தெரிவு செய்யப்பட்டார். (6)

# தகுதிச்சுற்று போட்டியில் நேபாளத்தை பந்தாடிய மே.இந்திய தீவுகள் அணி

## பூரன், ஹோப் அதிரடி



உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான தகுதிச்சுற்று ஆட்டங்கள் ஜிம்பாப்வேயில் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் மேற்கிந்திய தீவுகள் மற்றும் நேபாளம் அணிகள் மோதியது. இதில் டாஸ் வென்ற நேபாளம் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி மேற்கிந்திய தீவுகள் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக கிங் - மேயர்ஸ் களமிறங்கினர். மேயர்ஸ் 1 ரன்னிலும் அடுத்து வந்த சார்லஸ் 0 ரன்னிலும் ஆட்டமிழந்தனர்.

சிறிது நேரத்தில் கிங் 42 பந்துகளில் 32 ரன்கள் எடுத்து அவுட் ஆனார். இதனையடுத்து ஹோப்புடன் நிக்கோலஸ் பூரன் ஜோடி சேர்ந்து நேபாளம் அணியின் பந்து வீச்சை துவம்சம் செய்தனர்.

அதிரடியாக விளையாடிய பூரன் சதம் அடித்து 115 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். மறு முனையில் நிதானமாக விளையாடி கப்டன் ஹோப்பும் சதம் அடித்தார். இவர் 132 ரன்கள் எடுத்து அவுட் ஆனார்.

அடுத்து வந்த ரோவ் மேன் பவல் 14 பந்தில் 29 ரன்கள் எடுத்து வெளியேறினார். இறுதியில் மேற்கிந்திய தீவுகள் அணி 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 339 ரன்கள் எடுத்தது.

இதையடுத்து களமிறங்கிய நேபாளம் அணி வீரர்களின் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து சரியத் தொடங்கின.

தொடர்ந்து விளையாடிய வீரர்களில், ரோகித் 30 ரன்களும் கவுஷல் மல்லா 2 ரன்களும் தீப்பேந்திர சிங் 23 ரன்களும் குல்சன் ஜா 42 ரன்களும், சந்தீப் ஒரு ரன்னும் எடுத்தனர்.

இந்த ஆட்டத்தின் முடிவில், நேபாளம் அணி 49.4 ஓவரில் 10 விக்கெட் இழப்பிற்கு 238 ரன்கள் எடுத்து தோல்வியடைந்தது.

இதன்மூலம், 101 ரன்களில் நேபாள அணியை வீழ்த்தி மேற்கிந்திய தீவுகள் அணி அபாரமாக வெற்றியீட்டியது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊட்டச்சத்து குறைபாடு சிறுவர்களிடையே அதிகரிப்பு

## திரிபோஷா உற்பத்தியை ஆரம்பிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு திரிபோஷா வழங்குவது ஓராண்டுக்கு மேலாக நிறுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் குடும்ப சுகாதார சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் குழந்தைகளின் போசாக்கு நிலை தொடர்பில் பாரிய சிக்கல்கள் ஏற்படுவதாக குறித்த சங்கத்தின் தலைவர் தேவிகா கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சமீபகாலமாக ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்துள்ள நிலையில், இது தொடர்பில் அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# ஐ.நா பொதுச்செயலர்- ரணில் சந்திப்பு

(பாரிஸ்)

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் ஆரம்பமான புதிய உலகளாவிய நிதி உடன்படிக்கைக்கான மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டபோதே, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். (நி)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

## அமரர். ஜோர்ஜ் வூட்றோவில்சன்



அன்புடையீர்!

கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர்.ஜோர்ஜ் வூட்றோவில்சன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 24.06.2023 சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு புனித செபமாலை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கல்லறையில் உறங்கும் என் அன்புக் கணவரே! ஏழ் பிறப்பும் என் கூடவே இருப்பேன்- என்று
வாக்குரைத்தாயே! இன்று என்னை தனிமையில் தவிக்க விட்டுச்சென்றதேனோ!
உம் உடல் மட்டும்தான் கல்லறையில் உறங்குகிறது- உம் உயிரோ என்னுடன் கலந்துவிட்டது.
நிம்மதியாகத் துயில்கொள்ளும்உம் நிரோ ஓடிவருவாள் உம்முடன் சேர்ந்து
கல்லறையில் உறங்குவதற்கு...

பிறப்பு-22.01.1988 இறப்பு-25.05.2023

(சி-6801)

உம் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி நிரோ

இல: 21, உப்புக்குளம் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

இங்ஙனம்-
மனைவி, குடும்பத்தினர்.

# இராசிபலன்

24.06.2023
ஆனி 09, சனிக்கிழமை
சூரி 9 முன்னிரவு 08.21 மணி வரை
மகம் காலை 6.10 மணிவரை

சுபநேரம் -2.55- 4.25 மணிவரை
இராகுகாலம்-8.55-10.25 மணிவரை
அமிர்தசித்தம், குமாரசஷ்டி விரதம்

சந்திராஷ்டமம்-
திருவோணம்.

**வளவன்**

**மேஷம்**: பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**கடகம்**: தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியா கும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்**: பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் நிறைவேறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்**: உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எந்தக் காரியத்தையும் சிந்தித்துச் செய்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்**: வழிபாடு முன்னேற்றம் தரும், எந்தக் காரியத்தையும் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், வாகன சுகமுண்டு.

**சிம்மம்**: குடும்பத்தில் சுமைகளும், பொறுப்புக்களும் அதிகரிக்கலாம், மனதில் இனம் புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், திடீர் பயணங்கள் கைகூடும்.

**விருச்சிகம்**: பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம்.

**கும்பம்**: குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், புதிய தொழிற் வாய்ப்புக்கள் தேடி வரலாம்.

**மிதுனம்**: பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கன்னி**: குடும்பத்தில அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சுப் காரியச் செலவுகள் அதிகரிக்கலாம், சயனசுகக் குறைவான நாள்.

**தனுசு**: ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை ஏடுப்பீர்கள், பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**மீனம்**: பழைய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் முன்னேற்றமுண்டு, திறமைகள் வெளிப்படும் நாள், காரிய அனுகூலமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**வான், முச்சக்கரவண்டி மற்றும் சிறியவகை காவுவண்டி (Mini Truck) போன்ற வாகனங்களை கல்விசார் மற்றும் அலுவலக தேவைகளுக்காக அழைப்பின் பேரில் (Oncall) அல்லது வாடகை (Hiring) அடிப்படையில் வழங்குவதற்கான கேள்வி விண்ணப்பம் கோரல் (Invitation for Bid)-2023/ 2024**

தலைவர், கேள்விச்சபை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், மற்றும் அறிவியல்நகர் கிளிநொச்சி வளாகம் ஆகியவற்றின் அலுவலக மற்றும் கல்விசார் செயற்பாடுகளை செவ்வனே நிறைவேற்றுவதற்காக பின்வரும் வாகனங்களை அழைப்பின் பேரில் (On Call) அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு தகுதி வாய்ந்த கம்பனிகள் அல்லது தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ.இல் | வாகனங்களின் வகை | ஆசனங்களின் எண்ணிக்கை | தேவையான வாகனங்கள் | தேவைப்படும் இடங்கள் |
|---|---|---|---|---|
| 1.1 | பிரயாணிகள் வான், /Passenger Van | 10-16 | 03 | யாழ்/ கிளிநொச்சி |
| 1.2 | பிரயாணிகள் வான், /Passenger Van | 08-10 | 03 | யாழ்/ கிளிநொச்சி |
| 1.3 | முச்சக்கரவண்டி / Three wheeler | 03 | 01 | கிளிநொச்சி |
| 1.4 | சிறியவகை காவுவண்டி /Mini Truck 1500 – 2500 kg | 02 | 02 | யாழ்/ கிளிநொச்சி |

1. விண்ணப்பிக்க தகுதியுடைய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்வி விண்ணப்பங்களை ஆடி மாதம் பத்தாம் (10) திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.
2. சேவை ஒப்பந்தக்காலம் ஒரு (01) வருடத்தினையும் செயற்திறன் மதிப்பீட்டுக்காலம் அறுபது (60) நாட்களையும் கொண்டிருக்கும்.
3. வாகன முற்பதிவானது 2012 ஆம் ஆண்டிற்கு பிற்பட்டதாக இருத்தல் வேண்டும்.
4. வாகனங்கள் சேவை வழங்கும் நாட்களில் அதன் கிலோமீற்றர் மற்றும் நேரம் ஆகியவற்றின் பதிவுகள் அனைத்தும் பல்கலைக்கழகத்தின் சார்பில் உதவிப்பதிவாளர் பொதுநிர்வாகம் அவர்களால் அல்லது அவரது பிரதிநிதி ஒருவரால், மேற்பார்வை செய்யப்படும்.
5. பல்கலைக்கழக பிரதான வளாகத்தின் தேவைக்கான வாகனமாயின் பிரதான வளாகத்தில் இருந்தும் அறிவியல்நகர் கிளிநொச்சி வளாகத்தின் தேவைக்கான வாகனமாயின் அறிவியல்நகர் கிளிநொச்சி வளாகத்தில் இருந்தும் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.
6. நிறுவனம் அல்லது தனிநபர் பின்வரும் அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் அவசியமானது.
   - பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லது தனிநபர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
   - தகுதியுடைய விண்ணப்பதாரிகளின் வாகனம் அவரது பெயரில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.
   - குறைந்தது மூன்று (03) வருடங்கள் வாடகை வாகன சேவையை வழங்கிய அனுபவம் உள்ள நிறுவனமாக அல்லது தனிநபராக இருத்தல் வேண்டும்.
   - வருடாந்த வருமானம் கடந்த மூன்று (03) வருடங்களில் குறித்த ரூபாவினை குறைந்த வருமானமாக ஈட்டியிருத்தல் வேண்டும்.
     - 1.1 பிரயாணிகள் வான் / Passenger Van (12 - 16 இருக்கைகள்) ரூ 500,000.00
     - 1.2 பிரயாணிகள் வான் / Passenger Van (08 - 10 இருக்கைகள்) ரூ 500,000.00
     - 1.3 முச்சக்கரவண்டி / Three wheeler (03 இருக்கைகள்) ரூ 100,000.00
     - 1.4 சிறியவகை காவுவண்டி /Mini Truck 1500 - 2500 kg (02 இருக்கைகள்) ரூ 500,000.00
   - குறைந்தது ஐந்து வருட அனுபவமுள்ள நற்பண்புடைய சாரதிகள் கடமைக்கு அமர்த்தப்படல் வேண்டும்.
7. கேள்வி விண்ணப்பங்கள் யாவும் தொழில்நுட்பத் தேவைகள் மற்றும் வணிகத் தேவைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். அத்துடன் அவற்றிற்கான உரிய சான்றுகள் மற்றும் ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. கேள்வி மனுவிற்கான பாதுகாப்பு (Bid security) வைப்புப்பணமாக ரூபா 15,000.00 இனை இலங்கை மத்திய வங்கியால் அனுமதி வழங்கப்பட்ட யாதேனும் ஒரு வணிக வங்கியிடமிருந்து 09.10.2023 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் (90 நாட்கள்) காலத்தை உடைய பாதுகாப்பு வைப்புச் சான்றிதழ் ஒன்றை இணைத்தல் அவசியமானது. மாறாக, காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
9. முழுமையான கேள்வி விண்ணப்பத்தினை தமிழ் மொழியில் கொள்வனவு செய்வதற்கு விண்ணப்ப செயலாக்க கட்டணமாக ரூபா 3,000.00 நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில், மக்கள் வங்கி 97000060000276 கணக்கிலக்கத்தில் வைப்புச் செய்தல் வேண்டும். அல்லது காசாளரிடம் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பித்து உதவிப்பதிவாளர், பொதுநிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
10. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கேள்வி மனுவிற்கான பாதுகாப்புப் பணப் பத்திரம் (Bid security Certificate) மற்றும், விண்ணப்பச் செயலாக்கப் பணப் பற்றுச்சீட்டு (Application Processing fees) என்பன இணைத்து அனுப்புதல் வேண்டும், மேற்குறித்த பத்திரங்கள் இணைக்கப்படாத, முழுமையாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் காலதாமதமாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.
11. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் மூல ஆவணம் (Original), பிரதி (Duplicate) என்று தனித்தனியாக பொதியிட்டு அக்கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அழைப்பின் பெயரில் (On Call) / வாடகை (Hiring) அடிப்படையில் வாகனம் வழங்குதல் - 2023/ 2024" எனத் தலைப்பிட்டு தவிசாளர், கேள்விச்சபை, த.பெ.இ- 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 10.07.2023 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் அல்லது கையளித்தல் வேண்டும்.

❖ **முன் ஏலக்கூட்டம்** (Pre Bid Meeting)
- 01. திகதி : 30.06.2023
- 02. நேரம் : 10.00 am
- 03. இடம் : பிரதான சபா மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

❖ **ஏலத் திறப்பு (Bid Opening)**
- 01. திகதி:- 10.07.2023
- 02. நேரம்:- 02:00 pm
- 03. இடம்:- பிரதான சபா மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- 04. ஏலம் திறக்கப்பட்டு முதல் விலை ஏலங்கள் மதிப்பிடப்படும் பின்னர் தொழில் நுட்ப ரீதியில் ஏலங்கள் மதிப்பிடப்படும்.
- 05. ஏலம் திறக்கப்படும்போது ஏலதாரர் அல்லது அவர் சார் பிரதிநிதிகளில் ஒருவர் சமுகமளிக்கலாம்.

**மேலதிக தகவல்களுக்கு: உதவிப்பதிவாளர்/ பொதுநிர்வாகக் கிளை** - Tele: **021 222 6517,**
Fax:- **021 222 6517.**

**தலைவர்,**
**கேள்விச்சபை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(c-6803)

# நெடுந்தீவில் கைதான இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட 22 தமிழக மீனவர்களையும் எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நெடுந்தீவு அருகே கடந்த புதன் கிழமை இரவு மீன் பிடியில் ஈடுபட்ட போது அப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் மூன்று இந்திய படகினையும் அதிலிருந்த மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை காங்கேசன்துறைக்கு அழைத்து வந்து விசாரணைகளுக்கு பின்னர் கடற் றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக் கப்பட்டதையடுத்து நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இதனையடுத்து 22 இந்திய மீன வர்களை ஜூலை மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (நி-6)

# நவாலியில் வாள்களுடன் ஒருவர் பொலிஸாரால் கைது



(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நவாலி வடக்கு பகுதியில் நேற்று முன்தினம் இரவு வாள்களுடன் 40 வய துடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் இரண்டு வாள்களை எடுத்துச் சென்றபோது வீதியில் வைத்து, மானிப்பாய் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள் ளார்.

சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்ற த்தில் முற்படுத்து வதற்கான நடவடிக் கைகளை பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (நி-6-104)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரி யில் NVQ சான்றிதழ் தர குறுங்கால கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள் ளன.

அலுமினியப் பொருள் உருவமைத் தல் தொழில்நுட்பம், ஆடை கைத்தொழில் நுட்பம், மோட்டார் வாகனம் வர்ணம் பூசுதல் தொழில் நுட்பம், கணிய அளவை உதவியாளர் மற்றும் கணினி கிராபிக் வடிவமைப்பாளர் கற்கைநெறிகளுக் கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கைநெறியினை பயில விரு ம்புவோர் நேரடியாக தொழில் வழிகாட் டல் நிலையத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 2358, 0212212403 எனும் தொலை பேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ளுமாறு யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் அறிவித்து ள்ளார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்.

## காராளர் நவரத்தினம்

(விமலாஸ் உரிமையாளர்)

திதி:-சஷ்டி

அன்பினால் எமை அரவணைத்த தெய்வமே
அறிவினைப் புகட்டி அகிலத்தில் உயர வைத்தீர்கள்
அத்தனை உறவுகளையும் அன்பாக மதித்து
மனிதப் பிறப்பின் மகத்துவம் நிறைத்தீர்கள்
மனதார இறைதொண்டை மகிழ்வுடன் தொடர்ந்தீர்கள்
லயன்ஸ் கழகப் பணிகளில் உயிர்மூச்சாய் நின்றீர்கள்
இறக்கும் வரையும் பிள்ளைகளின் உயர்வுக்காய் உழைத்து
களைப்பறியாக் கதிரவனாய் காசினியில் திகழ்ந்தீர்கள்
மனம் கொண்ட மனையாளின் மறைவைத் தாங்காது
நான்கே மாதமதில் நானிலத்தைத் துறந்தீர்கள்
எங்கள் கலங்கரை விளக்கே! அப்பா
கரைதெரியாக் கப்பலாய் காரிருளில் தவிக்கிறோம்
தில்லைக்கூத்தன் திருவடியில் ஆனந்தமாய்
அமைதி பெற ஆண்டவனை வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

(C-6804)

அன்னை மடியில் 13 . 12 . 1946

ஆண்டவன் அடியில் 25 . 05 . 2023

இல 76, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்,
பிள்ளைகள்.

---

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2860

**செல்டன்**

குரு:- கடவுள் எல்லோருடைய வீட்டிலயும் இருக்க முடியாதுன்னு தான் அம்மாவை கொடுத்தார்.



சிஷ்யன்:- பொண்டாட்டிய ஏன் கொடுத்தார்?
குரு:- கடவுளை மறந்து விடக் கூடாதுன்னு தான்...

**யசோபிகா**

ஏழு கழுதை வயசானாலும் என்ன தான் நாத்திகம் பேசினாலும்...



நைட் தனியா தூங்கும் போது வீட்டில ஒரு செம்பு திடீரென்று விழுந்துட்டா அவ்வளவு தான் உயிரே போயிருது...

**சானுஜா**

முதலாளி:- டேய்! நான் கொஞ்சம் வீட்டுக்கு போய் ரெஸ்ட் எடுத்துட்டு வாரன் நீ கடையைப் பார்த்துக்கோ...

கடை பையன்:- உங்களுக்கு சிரமம் ஐயா.... நானே போய் அந்த ரெஸ்டை எடுத்துட்டு வந்திடுறன்... நீங்க கடையிலேயே இருங்க முதலாளி...

**தனுஜன்**

சமையல் பண்றவன் சமையல்காரன்னா... அப்போ வெள்ளை அடிக்கிறவன்தான் வெள்ளைக்காரனோ...



**சாங்கவி**

மனைவி:-நேற்று பார்த்த படத்தை பார்த்து எனக்கு சிரிச்சு சிரிச்சு பாதி உயிர் போயிடுச்சு.



கணவன்:- வாடா செல்லம் இன்னொரு தடவை இன்னைக்கும் அழைச்சிட்டு போறன்

**அர்ஜுன்**

சனிக்கிழமை இரவு வந்துச்சு... அப்புறம் காலைல விடிஞ்சிருச்சுன்னு பார்த்தா திங்கட்கிழமை...



இந்த ஞாயிற்றுக்கிழமை எங்கடா...?

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வலயக்க
# உயர்திரு.முத்து.இராதாகிருஷ்ணன்



## நல்லை ஆதீனத்தின் ஆசிச் செய்தி

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர்கத் திறன்மிகு சேவையாற்றி ஓய்வுபெறும் திரு.முத்துக்குமாரு இராதாகிருஸ்ணன் அவர்கள். 1982 இல் ஆசிரியராக முதல் நியமனம் பெற்று, புவியியல் ஆசிரியராக, உதவிக் கல்விப் பணிப்பாளராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி 2021 தொடக்கம் 2023 வரை யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெறுகிறார். பல்துறை ஆளுமை மிக்க கல்வியியலாளன். எழுத்துலகின் பல சாதனை விருதுகளுக்குச் சொந்தக்காரன். இவரது ஓய்வுக்காலம் மென்மேலும் கலையுலகில் சிறந்தோங்க வாழ்த்துகிறேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,**
**ஆதீன குரு முதல்வர்,**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சார்ய சுவாமிகள்,**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்.**



## நிர்வாகத் திறன்மிக்க பணிப்பாளர்

திரு. திருமதி. இராதாகிருஸ்ணன் தம்பதிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரே அணியைச் சேர்ந்த எனது மாணவர்கள். இருவரும் புவியியல் சிறப்புப் பட்டதாரிகள். சிறிது காலம் புவியியல் துறையில் விரிவுரையாளராகக் கடமையாற்றியவர்கள். பின் ஆசிரியப் பணியில் இணைந்தனர்.

கல்விப் பண்ப்பாளர் அவர்கள் பாடசாலைக் கட்டமைப்பை மேம்படுத்துவதிலும் ஆசிரியர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதிலும் மாணவர்களின் கல்வித் தேவைகளை நிறைவேற்றுவதிலும் அர்ப்பணிப்பான பணியைப் புரிந்துள்ளார். அவர் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு அப்பால் அவர்களின் பல்திறன் விருத்தியிலும் அக்கறை செலுத்தினார். அறிவும் ஆளுமையும் மிக்க ஓர் சிறந்த ஓவியப் படைப்பாளியும் ஆவார். அவர்களின் மகள் மருத்துவராகவும் மகன் பொறியியல்துறை மாணவனாகவும் உள்ளனர். திரு.இராதாகிருஸ்ணன் அவர்கள் தன் ஓய்வுக் காலத்தில் குடும்பத்தாருடன் ஆரோக்கியமாகவும் மகிழ்வாகவும் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர். பொ.பாலசுந்தரம்பிள்ளை,**
**வழிகாட்டல் பேராசிரியர் /முன்னாள்**
**துணைவேந்தர்.**



## படிப்பறிவும் பட்டறிவும் நிறைந்தவர்

திரு.முத்து.இராதாகிருஸ்ணன் அறுபது அகவையினை நிறைவு செய்து அடுத்த வாழ்க்கைச் சுற்றுவட்டத்துள் வந்துவிட்டார். படிப்பறிவும் பட்டறிவும் நிறைந்தவராக உள்ள அவர் இன்னும் பல பணிகள் ஆற்றவுள்ளார்.

ஐரோப்பிய நாடொன்றில் புலம்பெயர்ந்த தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழையும் தமிழர் பண்பாட்டையும் வரலாற்றையும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கும் நல்ல பணியிலே இராதாவும் நானும் மனோன்மணியும் ஈடுபடும் வாய்ப்புக் கிடைத்தது. கல்விச் சேவையிலே பல ஆண்டுகள் பெற்ற படிப்பறிவையும் பட்டறிவையும் பயன்படுத்தி அந்த ஆசிரியர்களை அவர் வழிநடத்திய பாங்கினைப் பார்த்து நாங்களும் அந்த ஆசிரியர்களைப் போலவே மிக்க மகிழ்ச்சியடைந்தோம். பிள்ளைகளுக்கு இலக்கியம் படைப்பவர் இராதா. அந்தக் கலையும் அவருடைய ஆசிரியக் கலையுடன் சேரும்போது கற்றல் - கற்பித்தல் எவ்வளவு செழுமையுற்றிருந்திருக்குமென்பதை நாம் உங்களுக்கு சொல்ல வேண்டியதில்லை.

சிலர் தங்கள் பணியிலிருந்து ஓய்வுபெற முடியாது. ஏனெனில் அவர்கள் வாழ்நாள் பணியாளர்கள். இராதாவும் அந்த அணியைச் சேர்ந்தவர். உங்கள் பணி மேலும் தொடர வாழ்த்துகிறேன். இனி உங்கள் பணிகளை உங்கள் குடும்பத்தினர் அரவணைப்புடன் ஆற்றுவதற்கு வாய்ப்புண்டு. அந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, நீண்டகாலம் வாழ்ந்து நம் மக்களும் சமூகமும் உங்களை நயந்து ஏத்தி வாழ எங்கள் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் பாராட்டுக்களையும் கூறி இந்த வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன்.

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்,**
**முனைவர் ச.மனோன்மணி,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**



## தேசிய சாதனையாளர்

சேற்றில் வளர் செந்தாமரை மலர் என மாய உலகின் மயக்க மறுத்து மாண்புடன் வாழ்பவர் மிகச் சிலரே; இவர்களில் தமக்கென ஒரு பாதை வகுத்து தரணி புகழ வாழ்பவர் வரிசையில் எமது யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருவாளர் முத்து இராதாகிருஸ்ணன் அவர்களும் ஒருவர் என்பது மிகையாகாது.

கல்வி வலயங்களில் மிகவும் சிறந்த இடத்தை வகிக்கும் யாழ்ப்பாணக் கல்வி வலயமானது. உயர்தரத்தினால் சிறப்புற்ற தேசியப் பாடசாலைகள் பலவற்றைக் கொண்டு தேசிய விருதுகள் பலவென்றும் பல துறைகளிலும் சாதனை படைத்து வரும் இவ்வலயத்தின் பணிப்பாளராக இருக்கின்ற எமது கல்விப் பணிப்பாளரின் ஆளுமையின் அறுவடையாகக் கிடைத்துள்ள சாதனைகளைப் பட்டியல்படுத்திவிட முடியாத அளவுக்கு நிறைந்துள்ளது.

இவ்வேளையில் அகவை அறுபது கண்டு மணிவிழாக் காணும் வேளையில் அவரது விழாவிற்குத் தலைமை தாங்குவதை பெறும்பேறாக நினைக்கின்றேன். மணிவிழாக் காணும் நாயகன் பல சேவைகளைப் பாரில் புரிந்து மனநிறைவுடன் குடும்ப உறவுகள் சகிதம் மகிழ்வோடு வாழ வாழ்த்தி நிற்கின்றேன்.

**திரு.சி.திரிகரன், அதிபர்,**
**யா /ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்,**
**தலைவர், மணிவிழாக்குழு.**



## யாழ்.ஆயரின் ஆசிச செய்தி

திரு.இராதாகிருஸ்ணன் அவர்கள் தமது கல்விப் பணியினை இனிதே நமது சமூகத்திற்கு வழங்கிட, கல்வித்துறையில் புவியியல் சிறப்பு கலைப்பட்டதாரி, பட்டப்பின் கல்வி டிப்ளோமாதாரி, முதுகல்விமாணி போன்ற பட்டப் படிப்புகளை நிறைவு செய்து தன்னை வளப்படுத்திக் கொண்டார். இவர் ஒரு சித்திர ஆசிரியராக, புவியியல் ஆசிரியராக, உதவிக் கல்விப் பணிப்பாளராக, பிரதிக்கல்விப் பணிப்பாளராக, வவுனியா வலயக் கல்விப் பணிப்பாளராக இறுதியில் யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளராக என்று பல்வேறு நிலைகளில், பல்வேறு இடங்களில் தமது பணியினை நேர்த்தியாகவும் சிறப்பாகவும் வழங்கியுள்ளார். இப்படிப்பட்ட கல்விமான், பல துறை சார்ந்த வல்லுநர், ஓய்வு பெறுவது எமக்கு வருத்தம் விளைவித்தாலும் இவரது கல்விப்பணி, சமய, சமூக, கலை சார்ந்த பணிகள் என்றும் தொடர ஆசிகள் கூறி நிற்பதோடு தொடர்ந்தும் இறைவன் இவருக்கு நல்உடல், உளசுகம் கொடுத்து காத்திட ஆசீர் வழங்கி நிற்கின்றேன்.

**மேதகு ஆயர்,**
**ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம், யாழ். ஆயர்.**



## கல்விப்புலத்திற்கு அளப்பெரிய சேவையாற்றியவர்

பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்த நட்பு வடகிழக்கு மாகாண கல்விக்களத்தில் தொடர்ந்து நான்கு தசாப்தம் கடந்து வந்துள்ளது ஆச்சரியமானதே. கல்வி நிர்வாகச் சேவையில் பொது ஆளணியாக இருந்த போதும் ஆரம்பக்கல்வித் துறையைப் பொறுப்பெடுத்து கல்வி மறுசீரமைப்பு அமுலாக்கலில் முக்கிய பணி ஆற்றியதுடன் வடக்கு, கிழக்கின் யுத்த பாதிப்பினால் பல விஷேட செயற்றிட்டங்களைத் திட்டமிட்டு அவற்றை யுனிசெவ் போன்ற நிறுவனங்களின் அனுசரணையுடன் கல்வியமைச்சின் அனுமதியுடன் செயற்படுத்துவதில் மறை காரணனாக இருந்துள்ளார்.

பல்துறை ஆளுமையாளனாக இருப்பதால் கல்விப்புலத்தின் பல செயற்றிட்டங்களிலும் இராதாவின் பங்கும் பயனுறுதி மிக்க முன்னெடுப்பும் கல்விப்புலத்தில் தாக்கம் செலுத்தியுள்ளது என்பேன். மௌனமாக இருந்து சலிப்பில்லாத பயணங்களுடன் சளைக்காமல் செயற்படும் கல்வி நிர்வாகி. இவரைப் போன்றவர்கள் அரிதாகவே கிடைப்பார்கள். மணிவிழாக் காணும் நண்பருக்கும் குடும்பத்தினருக்கும் வாழ்த்துக்கள்.

**இஸட். தாஜுதீன்,**
**கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,**
**கல்வி வெளியீட்டுத் திணைக்களம், இசுருபாய, பத்தரமுல்ல.**



## ஆற்றல் மிகுந்த செயல் வீரன்

திரு. முத்து இராதாகிருஸ்ணன் அவர்கள் ஆசிரியராக இருந்து திறமையாகச் செயற்பட்டதன் காரணமாக இலங்கை கல்வி நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து கல்வித்துறையின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு உறுதுணை செய்யும் வகையில் அவருடைய நியமனம் அமைந்து கொண்டது.

நானும் என் சக உத்தியோகத்தர்களும் இலங்கை கல்வி நிர்வாகச் சேவையில் சித்தியடைந்து வடக்கு மாகாணத்தின் பயிற்சிக்காக திருகோணமலையில் சேர்ந்த போது அப்பயிற்சிநெறியில் இணைப்பாளராக எமக்கு அறிமுகமானார். அப்பயிற்சியின் போது எங்கள் ஒவ்வொருவரினதும் தேவைகளையும் அறிந்து அவற்றை நிறைவேற்றி வைத்த ஒருவராக விளங்கினார். அது மாத்திரமன்றி சிறந்த உளவியல், கல்வி நிர்வாகம் சார்ந்த விடயங்களில் வளவாளராகவும் செயற்பட்டு தனது ஆற்றல்களை மற்றையவர்களுக்கும் வழங்கியிருந்தார். இவர் அகவை அறுபதைப் பூர்த்தி செய்ததன் காரணமாக ஓய்வு பெறுகின்றார். இவரது ஓய்வு சமூகத்திற்கு நல்ல பணியாற்றி அமைகின்ற காரணத்தினால் பாராட்டுக்குரியதாகும். இவரது ஓய்வுக்காலம் சிறக்க அவரது குடும்பத்துடன் சகல வளங்களும் பெற்று நீடூழி காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**திரு.பொ.ரவிச்சந்திரன்,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்.**



## கல்விப் புலத்தின் அளப்பரிய சேவையாளர்

யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளராக 2021-2023 ஆண்டு வரை கடமையாற்றி கல்வி நிர்வாக சேவையில் தடம் பதித்து தனது வாழ்நாளை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்காவும் வலயத்தின் கல்விப்புல அபிவிருத்திக்காவும் உயரிய சேவையை வழங்கிய சிறந்த சேவையாளன்.

கல்விப் புலத்தின் சவால்களை இலாவகமாக கையாள்வதில் சிறந்த ஆளுமையாக இவரை பார்க்கின்றேன். கல்விப்புலம் சார்ந்த இவரது தூரநோக்கான நேரிய சிந்தனைகள் இவருடன் இணைந்து பணியாற்றுவதில் இவரிடம் இருந்து கல்விப்புலம் பெற்று கற்றுக் கொள்வதையும் ஏற்படுத்தியது. தனது அமைதியான அணுகுமுறை மூலம் கல்வி நிர்வாகத்தையும் பிரதேச நிர்வாகத்தையும் இணைத்து கல்வி மற்றும் கல்விசாரா நடவடிக்கைகளில் காத்திரமான பங்களிப்பை ஆற்றியுள்ளார்.

விழாநாயகனான திரு.முத்து இராதாகிருஷ்ணன் அவர்களின் ஓய்வுக்காலம் அமைதியாகவும் மகிழ்வானதுமாக அமைவதுடன் நீண்ட ஆயுளுடனும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்வதற்கு எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிவாராக.

**எஸ்.சுதர்சன், பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.**



## பொன்னவர் மேனியும் அழகும் சிறியன சிந்தியா நெறியும்...

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெறும் முத்து இராதாகிருஷ்ணனை வாழ்த்த வேண்டுமென்று அவரது நண்பர்கள் கேட்டுக் கொண்டார்கள். அடேஅப்பா! அதற்கிடையில் முத்து இராதாகிருஷ்ணனுக்கு அறுபதாயிற்றா? ஆச்சரியமாக இருக்கிறது. அவருக்கு வயது வந்துவிட்டது. பணி ஓய்வு பெறுகிறார். எனக்கு வயது போய்விட்டது. நான் வாழ்த்துகிறேன். புன்னகை தவழும் முகமும் பொன்னவர்மேனி அழகும் சிறியன சிந்தியா நெறியும் மற்றவர் மனம் நோகப் பேசாத மாண்பும் அமைதியும் அடக்கமும் பணிவும் பண்பும் ஒன்றாக இருந்த முத்து இராதாகிருஷ்ணனைப் பல்கலைக்கழகத்திலே கண்டேன். அன்றைக்குக் கண்டது போலவே இன்றைக்கும் இருக்கிறார் வாழ்க நீ எம்மான்.

முத்து இராதாகிருஷ்ணன் போன்ற முழுமையான ஒரு மனிதனின் சேவை எம் தமிழ் மக்களுக்கு என்றும் தேவை. அது நிறைவேற ஆண்டவனை வேண்டி நிற்கிறேன். ஓய்வுக்காலத்தில் மனைவி, மக்கள், பேரக்குழந்தைகள் என்று உங்கள் பொழுதுகள் பொலிவுற வேண்டும் என்று வாழ்த்தி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா,**
**முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



## திரு.முத்துக்கு
## இராதாகிருஷ்

தந்தை: முத்துக்குமாரு –சட்டத்தரணி
தாய்: தனேஸ்வரி – ஆங்கில ஆசிரியர்
மனைவி: கேந்திரேஸ்வரி – ஓய்வுநிலை பிரதி அ
தி/கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
மகள்: Dr.சாகித்தியா – களுபோவில வைத்
மகன்: மதுஷாகரன்– பொறியியல் பீட இறுதி
ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம்

**ஆரம்பக் கல்வி :** யா/ இந்துக் கல்லூரி (1 நாள் மட்டும்)
யா / வண்ணை நாவலர் ம.வி (1967 - 19
யா / பரமேஸ்வரா கல்லூரி (1970 - 197
யா / முத்துத்தம்பி ம.வி (ஒரு வாரம்)

**இடைநிலைக்கல்வி /உயர்தரம் :** யா / சன்மார்க்க ம.வி (197

**பல்கலைக்கழகம் :** யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் (1982 -

**ஆசிரிய நியமனம்:** யா / ஸ்கந்தவரோதயா கல்லூரி (21.0
யா / அனலைதீவு சதாசிவ ம. வி (1987

**பட்டதாரி ஆசிரிய நியமனம் :** யா / கோப்பாய் கிறிஸ்தவ க

**தொலைக்கல்வி போதனாசிரியர் :** யா / புத்தூர் சோமஸ்கந்
நிலையம் (1991– 1995

**பட்டப்பின்பின் டிப்ளோமா கற்கை :** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

**ஆசிரியர் :** வ / தமிழ் மத்திய மகா வித்தியாலயம் (1996 -

**வருகைதரு விரிவுரையாளர் :** வவுனியா தேசிய கல்வியியற்

**கல்வி நிர்வாக சேவை (III) :** உதவிக் கல்விப் பணிப்பாளர் (

**ஆரம்பக்கல்விப் பணிப்பாளர் :** மாகாணக் கல்வித் திணைக்க
மாகாணம்

**அழகியல் கல்விப் பணிப்பாளர் :** திருகோணமலை

**விசேட கல்விப் பணிப்பாளர் :** பிரதிக்கல்விப் பணிப்பாளர் (2
மாகாணக் கல்வித் திணைக்க

**கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளர்**
வடக்கு கிழக்கு மாகாணம் (2004 - 2009)

**கல்வி நிர்வாக சேவை (II)**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாள
பொது நிர்வாகம், கல்வி அபிவிருத்தித்
மாகாணக் கல்வித் திணைக்களம், வடம

**கல்வி நிர்வாக சேவை (I)**
வலயக் கல்விப் பணிப்பாளர்,வவுனியா
வடக்கு (2016 - 2021)
வலயக் கல்விப் பணிப்பாளர் யாழ்ப்பாண

மலரமைப்பு : மணிவிழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க்கல்விப் பணிப்பாளர்
# ணன் அவர்களின் மணிவிழா சிறப்புமலர்



க்குமாரு
ருஷ்ணன்

ந்தரணி
ல ஆசிரியர்
வுநிலை பிரதி அதிபர்
ந்துக்கல்லூரி
போவில வைத்தியசாலை
ரியல் பீட இறுதியாண்டு மாணவன்
க்கலைக்கழகம்

1 நாள் மட்டும்)
ர் ம.வி (1967 - 1969)
லூரி (1970 - 1974)
(ஒரு வாரம்)
ர்மார்க்க ம.வி (1974 - 1981)
பக்கழகம் (1982 - 1986)
ா கல்லூரி (21.04.1982 - 1987)
ாசிவ ம. வி (1987 - 1989)
பாய் கிறிஸ்தவ கல்லூரி (1989 - 1995)
த்தூர் சோமஸ்கந்த தொலைக்கல்வி
யம் (1991– 1995)
ணப் பல்கலைக்கழகம் (1992 - 1993)
யாலயம் (1996 - 1998)
தேசிய கல்வியியற் கல்லூரி (1997 - 1998)
ல்விப் பணிப்பாளர் (1999 - 2004)
கல்வித் திணைக்களம் வடக்கு, கிழக்கு

ணமலை
விப் பணிப்பாளர் (2004 – 2007)
கல்வித் திணைக்களம்
பாளர்
9)

கல்விப் பணிப்பாளர் (2009 - 2016)
ல்வி அபிவிருத்தித் திட்டமிடல்
திணைக்களம், வடமாகாணம்.

ிப்பாளர்,வவுனியா தெற்கு /
21)
ிப்பாளர் யாழ்ப்பாணம் (2021 - 2023)

மணிவிழா குழு



## யாழ். அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

திரு. இராதாகிருஷ்ணன் யாழ்.பல்கலைக்கழகத்தில் என்னைப் போலவே புவியியற் துறையில் சிறப்புக்கலைமாணிப் பட்டம் பெற்று வெளியேறியவர். அவர் ஒரு சிறந்த நடிகர், கைதேர்ந்த ஓவியர், சிறுகதைகள் பல புனைந்து பரிசில்கள் வென்றவர், நல்ல கவிஞர், சமூக சேவையாளர், கல்வியாளர், உள ஆற்றுகைப்படுத்தும் கலை வல்லவர் எனப் பல்துறை விற்பன்னர்.

தனது ஆசிரியத் தொழிலை விருத்தி செய்து கல்வித் துறையில் பல பரிமாணங்களைக் கடந்து இலங்கைக் கல்வி நிர்வாக சேவையில் தேர்வாகி வடக்கு; கிழக்கு மாகாண சபையின் கீழும் பின்னர் வடக்கு மாகாண சபையின் கீழும் பல நிர்வாக மட்டங்களில் தன் ஆளுமையை வெளிப்படுத்தி துறைசார் புலத்தில் பெருமதிப்புப் பெற்றவர்.

ஓய்வு நிலையென்பது தொழில்சார்ந்தது. அது அவர் ஆற்றிக் கொண்டிருக்கும் சேவைக்கு உரியது அல்லவெனத் தெளிந்து அவர் நீண்ட ஆயுளும் நிறைந்த ஆரோக்கியமும் பெற்று தொடர்ந்தும் இச்சமுதாயத்திற்குத் தன் பணியை ஆற்ற எல்லாம் வல்ல இறையாசி கிட்டட்டும் என வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு.அம்பலவாணர் சிவபாலசுந்தரன்,**
**அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**



## மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

திரு.முத்துக்குமாரு இராதாகிருஷ்ணன் அவர்கள் 1982 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையாக 17 வருடங்கள் ஆசிரிய சேவையிலும் கல்வி நிர்வாக சேவையில் 24 வருடங்களுமாக 41 ஆண்டுகள் கல்வித் துறையில் சேவையாற்றியுள்ளார்.

1982 ஆம் ஆண்டு யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்று 5 வருடங்கள் அங்கு கடமையாற்றி தொடர்ச்சியாக யா/சதாசிவம் மகா வித்தியாலயத்தில் 02 வருடங்களும் மீண்டும் யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் 01 மாதம் கடமையாற்றி பின்னர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் 06 வருடங்களும் வவுனியா மத்திய மகா வித்தியாலயத்தில் 03 வருடங்களும் பணியாற்றினார்.

தொடர்ச்சியாக 1999.01.04 ஆம் திகதி முதல் இலங்கை கல்வி நிர்வாகச் சேவையில் நியமனம் பெற்று வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் 07 வருடங்கள் உதவிக்கல்விப் பணிப்பாளராகவும் பின்னர் 2006.03.22 தொடக்கம் பிரதிக்கல்விப் பணிப்பாளராக 01 வருடமும் தொடர்ச்சியாக வடக்கு மாகாணக்கல்வித் திணைக்களத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளராக 01 வருடமும் மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளராக 07 வருடங்களும் 2016.08.15 ஆம் திகதி தொடக்கம் 05 வருடங்கள் வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளராகவும் 2021.05.05 தொடக்கம் இன்று வரை யாழ். வலயக்கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி 2023.06.23 ஆம் திகதியுடன் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

கல்விச் சமூகத்திற்குத் திருப்திகரமான சேவையினை ஆற்றியதுடன். இவர் தனது சேவைக் காலத்தில் கலைத் துறையிலும் மிகவும் ஆர்வமாக ஈடுபட்டு அத்துறையிலும் பல விருதுகளைப் பெற்றுக் கொண்டவராவார். இவரது சேவையினையும் ஆற்றலினையும் பாராட்டுவதோடு, இவர் தனது ஓய்வுக்காலத்தில் பல சமூக, கலை, கலாசாரம் சார் பணிகளை மேற்கொண்டு தன் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. தி. ஜோன் குயின்ரஸ்,**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**மாகாணக் கல்வித் திணைக்களம், வடமாகாணம்.**



## கல்வியால் மற்றோரை உயர்த்திய மகான்

யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.முத்துக்குமார் இராதாகிருஷ்ணன் அவர்களின் சேவையினைப் பாராட்டுவதுடன் சேவைநலன் பாராட்டு விழாவினை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தான் கடமையாற்றிய அலுவலகங்களிலே சிறந்த நிர்வாகியாகவும் சிறந்த தலைமைத்துவத்துடனும் தனது சிறப்பான சேவையினை வழங்கியுள்ளார். கல்வியறிவும் சுயமரியாதை எண்ணமும் பகுத்தறிவுத் தன்மையுமே மனிதனை உயர்த்தும் ஒரு வழி எனக் குறிப்பிடப்படு கின்றது. தனி மனிதர் வாழ்வை இன்பமுடையதாகவும் நன்மையுடையதாகவும் மாற்றி அமைப்பதும் வாழ்வாங்கு வாழ வழி வகுப்பதுமே கல்வி. இத்தகைய கல்வியினை தனது தலைமைத்துவத்தின் கீழ் சிறந்த முறையில் வழங்கி மாணவர்களின் வாழ்விற்கு ஒளியூட்டி சிறந்து விளங்க பெரும் பொறுப்புடன் பணியாற்றியுள்ளார். திரு.இராதாகிருஷ்ணன் அவர்கள் கல்வியியலாளராக மட்டுமன்றி உளவழிப்படுத்துனராகவும் சிறந்த எழுதுநராகவும் கவிஞராகவும் ஓவியராகவும் இசையாளராகவும் நாடகவியலாளராகவும் சமாதான நீதிவானாகவும் பல்வேறு துறைகளிலும் தனது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார். வடஇலங்கை சங்கீத சபை, வண்ணை நாவலர் தர்மகர்த்தா சபை மற்றும் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியின் தர்மகர்த்தா சபை போன்றவற்றின் தலைவராகவும் செயற்பட்டு வருவது இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவரது அளப்பரிய சேவையினைப் பாராட்டுவதுடன், தனது ஓய்வுக்காலத்தில் பல சமூக, சமயப் பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**திரு.அ.உமாமகேஸ்வரன், செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்**
**இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.**



## பிரதிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமை ஆற்றி ஓய்வு பெற்றுள்ள உயர்திரு. முத்து இராதாகிருஷ்ணன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

தனது வயதின் பெரும்பகுதியை அதாவது, நான்கு தசாப்த காலத்துக்கும் அதிகமான மிக நீண்டதொரு கல்விப் பணியினைச் சிறப்பாக ஆற்றிய பெருமையுடனே அரச பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் திரு. முத்து இராதாகிருஷ்ணன் அவர்கள். ஆசிரியராக, உதவி, பிரதி கல்விப் பணிப்பாளராக, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக, இரு பெரிய வலயங்களின் வலயக்கல்விப் பணிப்பாளராக என வடபுல மண்ணில் தனது கல்விச் சேவையை செவ்வனே வழங்கிய சேவையாளர்.

கல்வி அபிவிருத்தி தொடர்பாக பரந்த பார்வைப் புலத்தைக்கொண்ட திரு.முத்து இராதாகிருஷ்ணன் அவர்கள், யுத்த கால இடம்பெயர்வுகளால் எம் பிரதேச கல்வியில் வீழ்ச்சி ஏற்படா வண்ணம் UNICEF அமைப்புடன் இணைந்து இழந்த கல்வியை மீட்டெடுப்பதில் கருத்துடன் களமாடியவர்.

அந்த வகையில், அடுத்த சந்ததியை செப்பனிடும் கல்விப் பணியில் தலைமைத்துவம் எனும் பொறுப்புக் கூறலை ஏற்று அப்பணியை ஆற்றிய வகையால் எம்மில் தாக்கத்தை ஏற்படுத்தி செல்லும் திரு. முத்து இராதாகிருஷ்ணன் அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில் மனைவி மக்களுடனும் இவர் தம் வழித்தோன்றல்களுடனும் மகிழ்ச்சியாக வாழ மனதார வாழ்த்துகின்றேன்.

**திருமதி.பிரதீபா காயத்திரி கஜபதி,**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்,**
**[illegible]**



## துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

இன்று மணிவிழாக் காணும் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. முத்துக்குமாரு இராதாகிருஷ்ணன் அவர்கள் தன்னுடைய அறிவாலும் ஆளுமையாலும் ஆற்றல் மிகுந்த பல பதவிகளை அலங்கரித்து ஓய்வு பெறுகிறார்.

திரு. முத்துக்குமாரு இராதாகிருஷ்ணன் அவர்கள் தன்னுடைய பதவிக் காலத்தில் ஆசிரியர்களை வழிநடாத்தும் நேரங்களில் அவர் சிறந்ததொரு உளவள வழிப்படுத்துநராகவும் செயற்பட்டிருக்கிறார். தன் கடமைக்கு மேலதிகமாக மிகச் சிறந்ததொரு கல்வியியலாளராகவும், இயல் - இசை - நாடகக் கலைஞராக முத்தமிழோடு வாழ்ந்த ஒருவராகவும் திகழ்ந்தவர்.

இவரது நூல்கள் பல சாகித்திய விருது பெற்றமை எழுத்துத் துறையில் இவரது புலமைக்குச் சான்றாகும். இத்தகு பெருமை மிகு திரு. முத்துக்குமாரு இராதாகிருஷ்ணன் அவர்களின் ஓய்வுக்காலம் சேவையின் முழுமையான மகத்துவத்துடன் அமைய வாழ்த்துகின்றேன். எல்லாப் புகழும் இறைவனுக்கே.

**பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, துணைவேந்தர்,**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.**



## பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி

மணிவிழாக் காணும் மாண்புமிகு கல்விப் பணிப்பாளர், மனிதநேயம் படைத்த முத்து இராதாகிருஷ்ணன் அவர்களின் கல்விப்பணியும் வாழ்வும் மிக முன்னுதாரணமானவை. ஆசிரியத்துவத்தை உயிர்ப்பிக்கும் ஆளுமை, ஆக்கத்திறன், மனிதத்துவ, வன்முறையற்ற உறவாடல், பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல், அர்ப்பணிப்பான கல்விச் சேவை என்ற வகையில், முத்து இராதாகிருஷ்ணன் அவர்களின் பணிகள் மிக உயர்ந்தவை.

திரு.முத்து இராதாகிருஷ்ணன் ஆசிரியராக இருந்து படிப்படியாக கல்வித் துறையில் உயர்பதவிகளை அடையும் வரை ஓர் உயர்வான ஆசிரியத்துவ அர்ப்பணிப்பாளராக, ஆக்கத்திறனாளராக பல படைப்புக்களை உருவாக்கியவர். கவிதை, ஓவியம்; சிறுகதை, நாடகம், தமிழ் இலக்கியம் என இவரது ஆக்கங்கள் எல்லாம் மாணவர்களின் கல்வித்துறையை உயிர்ப்பிக்கும் படைப்புக்களாக உருவாக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு நல்ல மனிதராகப் பல வகிபாகங்களை உன்னதமாக மேற்கொண்ட திரு.முத்து இராதாகிருஷ்ணன் அவர்களின் மணிவிழா சிறப்புறவும் அவரது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியுடன் வாழவும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தின் சார்பிலும் தனிப்பட்ட ரீதியிலும் இறைஆசி வேண்டி எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.சு.பரமானந்தம், பீடாதிபதி,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.**



## கல்வித்துறையின் சாதனையாளர்

உலகோர் போற்றும் வண்ணம் கல்விப் பணியை உவந்தளித்த திரு.முத்து.இராதாகிருஷ்ணன் தனது நாற்பது ஆண்டு கால அரச சேவைகள் சார்ந்த கல்விப் பணியை நிறைவு செய்து ஓய்வு பெறுகிறார்.

கல்வித்துறையில் நாற்பது ஆண்டு காலம் சேவையாற்றக் கிடைக்கின்ற வாய்ப்பு ஒருவருக்கு சாதாரணமானதல்ல. அவருள் அடங்கியிருந்த பல்வேறு ஆளுமைப் பண்புகளின் உள்ளடக்கமே வெற்றிகரமான நாற்பது ஆண்டுகாலக் கல்விப் பணியாக வெளிப்பட்டது. கல்வியாளராக, உளவழிப்படுத்துனராக, எழுத்தாளராக, கவிஞராக, ஓவியராக, இசையாளராக, நாடகவியலாளராக பல்துறை ஆற்றலைக் கொண்டவராக பணிப்பாளர் விளங்குகிறார்.

கடந்த 2021 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை எமது கோப்பாய் ஆசிரிய கலாசாலை செயற்பாடுகளுடன் நேரடியாகத் தொடர்புறும் பணிப்பாளராக அவர் விளங்கினார். கலாசாலை மத்திய கல்வி அமைச்சால் ஆளுகை செய்யப்பட்டாலும் அதன் பரிபாலனம் சார்ந்த பங்கும் பணியும் யாழ்ப்பாணக் கல்வி வலயப் பணிப்பாளராலும் ஆற்றப்படுகிறது.

ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் அவரது பல்துறை ஆற்றல் மிக்க பணிகள் மேலும் பொலிவுற்று நிறைவுறவும் கலாசாலைச் சமூகத்தின் சார்பில் இனிய நல்வாழ்த்துக்கள்.

**திரு.சந்திரமௌலீசன் லலீசன், அதிபர்,**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலை.**



## சீரிய கல்விப் பணியாளர்

யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளர் 41 ஆண்டுகள் கல்விப் பணி செய்த ஒரு உன்னதமான கல்விமான். ஆசிரியர், உதவிக் கல்விப்பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் என வடக்கு, வடகிழக்கு மாகாணங்களில் சீரிய கல்விப் பணி ஆற்றியவர். இவர் 2021 ஆம் ஆண்டு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளராக பதவியேற்ற பின்பு இவருடன் மிக நெருங்கிப் பழகக்கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டமை ஓர் வரப்பிரசாதமாகவே கருதுகின்றேன்.

கோப்பாய், நல்லூர் கோட்டங்களில் கோட்டக் கல்விப் பணிப்பாளராக நான் கடமையாற்றுகின்ற காலத்தில் இக்கோட்டங்களிற்குத் தேவையான மனிதவளம், பௌதீக வளம் போன்றவற்றைத் தேடித் தேடி பெற்றுக் கொடுத்து மாணவர்களின் கல்வி அடைவு மட்டங்களை உயர்த்தியவர்.

கடின உழைப்பால் சிகரம் தொட்ட எமது வலயக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு.முத்து இராதாகிருஷ்ணன் அவர்கள் தனது அறுபதாவது அகவையில் கொண்டாடும் இப்பிறந்தநாளில் எல்லா வகையான நலங்களும் பெற்று குடும்பத்தாருடன் நோய்நொடியின்றி நீடூழி காலம் வாழ எல்லாம் வல்ல நல்லூர்க் கந்தப்பெருமானை பாதம் பணிகின்றோம்.

**திரு.நா.சிவநேசன், கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**
**கோட்டக்கல்வி அலுவலகம், கோப்பாய்.**

(C-6805)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஏழையின் வருமானம் வரியின் சன்மானம்'
# வரி அறவீட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து
# கிளிநொச்சியில் வர்த்தகர்கள் கதவடைப்பு

(கிளிநொச்சி)

அதிகரித்த வரி அறவீட்டுக்கு எதிராக கிளிநொச்சி சேவை சந்தை வர்த்தகர்கள் நேற்று கடைகளை மூடி எதிர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.



கிளிநொச்சி சேவை சந்தை வர்த்தகர்களினுடைய வாழ் வாதாரத்திற்கான மேலதிக வரி அறவீட்டுக்காக அனைத்து வியாபார நிலையங்களையும் மூடி கதவடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுவரை காலமும் 1500 ரூபா வரி மற்றும் கழிவகற்றலுக்காக ஒவ்வொரு வியாபாரியிடமும் மாதாந்தம் பெறப்பட்டு வந்த நிலையில் மே மாதம் தொடக்கம் 7500 ரூபா வரியாகவும் 600 ரூபா கழிவகற்றலுக்கும் என 8100 ரூபா அறவிடப்பட்டுள்ளது.

இவ் திீர் கட்டணத் தொகையினால் வர்த்தகர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்திற்கு வருகை தந்த கரைச்சி பிரதேச சபை செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளரும் போராட்டத்தில் ஈடுபட்டோரிடம் கலந்துரையாடினர்.

இத்தீர்மானம் 2020 ஆம் ஆண்டு வரி மதிப்பீட்டு திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானம் எனவும் இது தொடர்பில் வட மாகாண ஆளுநராலேயே இதற்கு தீர்வு பெற்று தர முடியும் என கூறி அங்கிருந்து சென்றுள்ளனர்.

இதனால் குறித்த போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (27,315,316)

## வீடு உடைத்து திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுணாவில் பகுதியில் அமைந்துள்ள ஆட்கள் அற்ற வீட்டினை உடைத்து பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த ஒருவர் நுணாவில் பகுதியில் புதிதாக வீடு கொள்வனவு செய்துள்ள குறித்த வீட்டிலேயே நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு திருட்டு இடம் பெற்றிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது வீட்டின் கதவுகள், ஜன்னல் கதவுகள், தளபாடங்கள், இலத்திரனியல் பொருட்கள் என சுமார் 6இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன்சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-6-30)

### தமிழ்மொழி கற்கைநெறியை
## பூர்த்தி செய்த பொலிஸாருக்கு சான்றிதழ் வழங்கி வைப்பு

(நெளுக்குளம்)

இரண்டாம் மொழிக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த பொலிஸாருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

அரச கரும மொழிகள் திணைக்களத்தின் அனுசரணையுடன், இலங்கை பொலிஸ் பயிற்சி கல்லூரியின் ஏற்பாட்டில் இரண்டாம் நிலைக் கல்வியான தமிழ்மொழியினை கற்று பரீட்சையில் சித்தியடைந்த 250 பொலிஸாருக்கான நற்சான்றிதழ்கள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வட மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரத்ன, உதவி மாவட்ட செயலாளர் மகிந்தன் சபர்ஜா மற்றும் வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (நி-6-299)

## புனரமைக்கப்பட்ட தலங்கைமங்கை குளம் மக்கள் பாவனைக்கு கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சித்தன் கேணி துறட்டிப்பனை அம்பாள் ஆலயத்துக்கு அருகே புனரமைக் கப்பட்ட தலங்கைமங்கை குளம் மக்கள் பாவனைக்கு கையளிக் கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்றது.

சங்கானை தெற்கு கமக் கார அமைப்பின் ஆதரவுடன் உலக சித்தன்கேணி ஒன்றிய மக்க ளின் நிதி அனுசரணையுடன் ப்ரத்யங்கிரா அறக்கட்டளையால் இந்தக் குளம் புனரமைக்கப்பட்டிருந்த நிலையில் யாழ்ப்பாணம் கமநல அபிவிருத்தி திணைக் கள உதவி ஆணையாளர் திருமதி தெய்வநாயகி பிரணவன் சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்தார். (நி-6)

## 'பன்றி நெல்' தாக்கம் தொடர்பில் விவசாயிகளுக்கு தெளிவூட்டல்



(யாழ்ப்பாணம்)

நெற்செய்கையில் தாக்கத்தை விளைவிக்கும் பன்றி நெல் எனும் களையின் தாக்கம் தொடர்பாக விவசாயிகளுக்கு தெளிவூட்டும் கலந்துரையாடல் நிகழ்வு அளவெட்டி பினாக்கை பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது

இதன்போது நெற்செய்கையாளர்களுக்கு பன்றி நெல் களையினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக பினாக்கை வயல் வெளிப்பகுதியில் விளக்க உரைகள் வழங்கப்பட்டது. இந் நிகழ்வில் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அஞ்சனா தேவி சிறிரங்கன் மற்றும் விவ சாய போதனா ஆசிரியர்கள், அளவெட்டி பகுதியைச் சேர்ந்த நெற் செய் கையாளர் கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-6-33)



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். பிரதேச செயலகமும் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா-2023 நேற்று யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்-சிவசாந்தன்)

## அதிக விலைக்கு விற்பனை; வர்த்தகருக்கு அபராதம்

(கரணவாய்)

கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்த வர்த்தகருக்கு ஒரு இலட்சம் ரூபாய் -குற்றப்பணமாக அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளினால் கரவெட்டி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது குறித்த வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கின் போதே குறித்த வர்த்தகருக்கு ஒரு இலட்சம் ரூபாய் தண்டப் பணம் செலுத்துமாறு தீர்ப்பு வழங்கப்பட்டது. (நி-6-60)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

கலாநிதி. நடராஜா சிவராஜா நினைவுப்பேருரை - 2023

பேருரைத் தலைப்பு :

**Cardiovascular risk in the Northern Province of Sri Lanka: The unseen picture**

பேருரை வழங்குனர்

**Prof. Anuradhani Kasturiratne,**
Professor in Public Health,
Faculty of Medicine,
University of Kelaniya.

திகதி : 26.06.2023 (திங்கட்கிழமை)
பி.ப 3.00 மணி

நிகழ்விடம் : ஹூவர் கேட்போர் கூடம், மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(சி-6800)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் பருத்தித்துறை பிரதேசசெயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பருத்தித்துறை ஆதார மருத்து வமனை இரத்தவங்கியுடன் இணைந்து பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற இரத்ததான முகாமில் பிரதேச செயலக ஊழியர்கள் கலந்து கொண்டு குருதி வழங்கினர். (படம்- மகாலிங்கம்)

# தொழுநோயாளர்களில் 4.8 வீதமானோர் சிறுவர்கள்- சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

**வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 48 சிறுவர் தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.**

அதன் பிரகாரம் நாட்டில் இதுவரை 600 தொழு நோயா ளர்கள் அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

மொத்த தொழு நோயா ளர்களில் 8.4 வீதமானோர் சிறுவர்கள் என சுகாதார அமைச்சின் தொழு நோயாளர் பிரிவு தெரிவிக்கின்றது.

இதேவேளை, அடுத்த மாத த்திலிருந்து தொழு நோயா ளிகளை அடையாளம் காணும் செயற்பாடுகளில் தன்னார்வ குழுக்களை ஈடுபடுத்த தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தை உள் ளடக்கி முதல் கட்டத்தில் இந்த செயற்பாடு முன்னெடுக்கப் படவுள்ளதாக சுகாதார அமை ச்சின் தொழுநோயாளர் பிரி வின் விசேட மருத்துவ நிபு ணர் மருத்துவர் பிரசாத் ரண வீர தெரிவித்துள்ளார். (நி)

# சாரதிகள்,நடத்துநர்களின் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் நடவடிக்கை ஆரம்பம்

## இலங்கை போக்குவரத்து சபை தெரிவிப்பு

(கொழும்பு)

சாரதிகள் மற்றும் நடத்து நர்களுக்கு நிலவும் வெற்றிட ங்களுக்குப் பொருத்தமா னோரை இணைத்துக் கொள் ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக இலங்கை போக் குவரத்து சபை தெரிவித்துள் ளது.

520 சாரதிகளுக்கும் 170 நடத்துநர்களுக்கும் வெற்றிடம் நிலவுவதாக இலங்கை போக் குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித் துள்ளார்.

ஊழியர்கள் பற்றாக்குறை யினால் பேருந்து சேவையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட பாதிப்புகளைக் கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேர்முகத் தேர்வினூடாக சாரதிகள், நடத்துநர்களின் வெற்றிடங்களுக்கு உரிய வர்கள் தெரிவு செய்யப்படு வார்கள் என இலங்கை போக் குவரத்துச் சபையின் தலைவர் தெரிவித்தார்.

அவர்களுக்கு ஜூலை மாத இறுதிக்குள் நியமனம் வழ ங்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு புதிய தலைவர் நியமனம்

(கொழும்பு)



இலங்கை பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கு பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோவை நியமிக்க அரசியலமைப்பு பேரவை அனும்தி வழங்கி யுள்ளது.

இதன்படி, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணை க்குழுவின் தலைவராக பேரா சிரியர் மஞ்சுள பெர்னாண்டோ நேற்று வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக கட மைகளைப் பொறுப்பேற்றார்.

மே மாதம் பதவி நீக்கப்பட்ட முன்னாள் பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க விற்கு பதிலாக இவர் நியமிக் கப்பட்டுள்ளார்.

இலங்கை பொதுப் பயன் பாடுகள் ஆணைக்குழு சட்ட த்தின் 7 ஆவது பிரிவின் பிரகாரம் ஜனக ரத்நாயக்கவுக்கு எதிரான பாராளுமன்ற பிரே ரணை முன்வைக்கப்பட்டது.

ரத்நாயக்க மற்றும் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகியோ ருக்கிடையில் மின்சாரக் கட்டணத் திருத்தம் மற்றும் மின்வெட்டு காலம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொட ர்பாக பல வாக்குவாதங்கள் இடம்பெற்றதை அடுத்து இந்த பிரேரணை முன்வைக்க ப்பட்டது. (நி)

# அதிகபட்ச விலைக் காட்சி கட்டாயம் இல்லையேல் சட்ட நடவடிக்கை

## அமைச்சர் அதிரடி



(கொழும்பு)

விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு பொருளின் அதிகபட்ச விலையையும் காட்சிப்படுத்துவது கட்டாயம் எனவும் அவ்வாறு செய்யாத நிறுவனங்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப் பிட்டுள்ளார்.

நிலையான நாட்டிற்கு ஒரு வழி என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மத்திய நிலையம் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் இத னைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்கவின் சரியான தீர்மா னங்களினால் அரிசி இறக்கு மதிக்காக அரசாங்கம் செலவிட்ட 350 மில்லியன் அமெரிக்க டொலர் தொகையை சேமிக்க முடிந்துள்ளது.

நுகர்வோரை பாதுகாக்கும் நோக்கில் 20 வருடங்கள் பழைமையான நுகர்வோர் அதிகார சபை சட்டத்தில் திரு த்தம் மேற்கொள்ள நடவடி க்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் வரிச் சலுகைகளைப் பெற்று மக்க ளுக்கு நிவாரணம் வழங்காத அத்தியாவசியமற்ற உணவுப் பொருட்களை உற்பத்தி செய் யும் நிறுவனங்களுக்கு எதிரா கவும் சட்ட நடவடிக்கை எடுக்க ப்படும் என அமைச்சர் தெரிவித்தார். (நி)

# கனடா பிரதமரின் அறிக்கைக்கு எதிராக சிங்கள ராவய ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கை தொடர்பில் கனடா பிரதமர் வெளியிட்ட அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பிலுள்ள கனேடிய தூதரகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்ட மொன்று முன்னெடுக்கப்பட் டுள்ளது.

நேற்று வெள்ளிக் கிழமை கொழும்பிலுள்ள கனேடிய தூதரகத்திற்கு முன்னால் இடம்பெற்ற ஆர் ப்பாட்டம் சிங்கள ராவைய தலைமையில் இடம்பெற்றது.

இலங்கை இராணுவம் போர்க்குற்றத்தை இழைக்க வில்லையெனத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கோஷங் களை எழுப்பியதுடன் பதா கைகளை ஏந்தி போராட் டத்தில் ஈடுபட்டனர். (நி)

# மின்சார சபையில் தற்காலிகமாக பணியாற்றும் 4000 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்

## அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

(கொழும்பு)

மின்சார சபையில் தற் காலிக அடிப்படையில் பணி யாற்றும் சுமார் 4,000 ஊழி யர்கள் எதிர்காலத்தில் உறுதி ப்படுத்தப்படவுள்ளதாக மின் வலு மற்றும் எரிசக்தி அமை ச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று முன்தினம் பாராளு மன்றத்தில் தெரிவித்தார்.

இந்த நாட்களில் மின்சார சபையில் மனித வளக் கணக் கெடுப்பு- நடத்தப்படுவதால், அந்த குழுவை உறுதிப்படு த்துவது ஒத்திவைக்கப்பட்டு ள்ளதாகவும் தெரிவித்தார்.

அந்த குழுவின் ஆட்சேர்ப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இந்த குழு மின்சார சபையில் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

அவை எதிர்காலத்தில் உறு திப்படுத்தப்படும். தற்காலிகமாக நிறுத்தப்பட்ட பதவி உயர்வு நடைமுறைகளும் எதிர்கால த்தில் மேற்கொள்ளப்படும்.

மின்சார சபை மறு சீரமைப்பின் பின்னர் தற்போது பணிபுரியும் அனைத்து ஊழி யர்களுக்கும் புதிய நிறுவ னங்களில் இடம் வழங்கப்படும்.

அவர்களுக்கு தற்போதைய சம்பளத்தை விட அதிக சம்பளம் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மின்சார சபையின் கீழ் தற்போது அனுபவிக்கும் வச திகள் அவ்வாறே வழங்கப்படும் எனவும் எதிர்காலத்தில் புதி தாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ள ப்படமாட்டாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி ஜூலையில்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் விடை த்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நிறைவடைந்தவுடன், க.பொ.த சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணிகள் ஆரம்பிக்க ப்படும் என பரீட்சை ஆணை யாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் களை ஜூலை மாத இறுதியில் இருந்து மதிப்பீடு செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்து ள்ளார்.

பரீட்சைப் பெறுபேறுகளை மாணவர்களுக்கு விரைவில் வெளியிடுவதற்கு பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடு ப்பதாகவும் க.பொ.த உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மதி ப்பீட்டுப் பணி தற்போது 37 பாட சாலைகளில் இடம்பெற்று வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 212





என் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போலிருந்தது. மகாராணி இராத்திரியெல்லாம் தூங்கவேயில்லையாம்!"

"இனிமேல் அப்படியெல்லாம் பேச மாட்டான். நான் புத்தி சொல்லித் திருத்தி விடுகிறேன். அவனிடம் நல்ல வார்த்தையாகச் சொன்னால் கேட்கிறான்!" என்றாள்.

"நல்ல வார்த்தையும் ஆயிற்று பொல்லாத வார்த்தையும் ஆயிற்று. அவன் இராமேசுவரத்துக்கு உடனே போகட்டும். இராமர், பூஜை செய்து பாவத்தைப் போக்கிக். கொண்ட சிவலிங்கத்தை இவனும் பூஜை செய்துவிட்டு வரட்டும். அதுதான் இவனுக்குப் பிராயச்சித்தம். அப்படிச் செய்யும் வரையில் நான் இவன் முகத்திலேயே விழிக்க மாட்டேன்!" என்றார்.

திருமலையின் உதடுகள் துடித்தன. வட்டியுடன் சேர்த்துத் திருப்பிக் கொடுப்பதற்குத்தான். ஆனால் பேசினால் காரியம் கெட்டுவிடும் என்று பொறுமையைக் கடைப்பிடித்தான்.

பட்டரின் பத்தினி இச்சமயத்தில் மறுபடியும் தலையிட்டு, "அதற்கு என்ன? இராமேசுவரத்துக்குப் போகச் சொன்னால் போகிறான். அவனுடன் நாமும் போகலாம். இத்தனை நாள் ஆகியும் நமக்குந்தான் குழந்தை பிறக்கவில்லை. பூர்வ ஜன்மத்தில் என்ன பாவம் செய்தோமோ, என்னமோ? திருமலை! எல்லாருமாக இராமேசுவரத்துக்குப் போகலாமா?" என்று கேட்டாள்.

அவர்கள் இரண்டு பேரையும் சிவபட்டர் முறைத்துக் கோபமாகப் பார்த்து விட்டுப் போய்விட்டார்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஈசான பட்டர் திரும்பி வந்து திருமலையிடம் சாந்தமாகப் பேசினார்.

"தம்பி! 'கோபம் பாபம் சண்டாளம்' என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் கோபத்துக்கு இடம் கொடுத்து விட்டேன். உனக்கு ஒன்றும் வருத்தம் இல்லையே?" என்றார்.

"இல்லவே இல்லை!" என்று சொன்னான் ஆழ்வார்க்கடியான்.

"அப்படியானால் நீ இங்கேயே இரு! உச்சிகால பூஜையை முடித்துக் கொண்டு நான் வந்து விடுகிறேன்.

உன்னிடம் சில முக்கியமான விஷயங்களைப் பற்றிச் சொல்லி யோசனை கேட்க வேண்டும். இங்கேயே இருக்கிறாய் அல்லவா? எங்கும் போய்விட மாட்டாயே?" என்றார்.

"எங்கும் போகவில்லை, அண்ணா! தங்களை விட்டு எங்கும் போவதாக உத்தேசமில்லை!" என்றான்.

பட்டர் போய் விட்டார். ஆழ்வார்க்கடியான் தனக்குத்தானே, "அப்படியா சமாசாரம்!" என்று சிலமுறை சொல்லிக் கொண்டான். பிறகு அண்ணியிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டான். செய்குன்றுகள் சூழ்ந்த வடமேற்றளிக் கோயிலை இரண்டு மூன்று தடவை சுற்றி வந்தான். அவ்வப்போது ஏதேனும் சத்தம் கேட்டால் உடனே மறைந்து நின்று கொண்டான்.

அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. சமணர் முழைகளில் ஒன்றின் வாசல் மெதுவாகத் திறந்தது. முதலில் ஈசான சிவபட்டர் மூன்று பக்கமும் பார்த்துவிட்டு வெளியே வந்தார். பின்னால் இன்னொரு மனிதன் வெளிப்புறப்பட்டு வந்தான். ஆகா! இவன் யார்? முகம் தெரியவில்லையே? உடல் அமைப்பைப் பார்த்தால் கம்ஸன் வேடம் பூண்டிருந்தவன் மாதிரி இருக்கிறது! யாராயிருக்கும்? இதைக் கண்டுபிடிக்காமல் விடுவதில்லை.

ஓஹோ! இதற்குத்தானா, இவ்வளவு கோபதாபம் மூடு மந்திரம் எல்லாம்!

முழையிலிருந்து வெளிப்பட்ட இருவரும் முன்னால் சென்றார்கள். ஆழ்வார்க்கடியான் ஒதுங்கிப் பதுங்கி மறைந்து பின்தொடர்ந்தான்.

சிறிது நேரம் நடந்ததும் ஓடைக் கரையை அடைந்தார்கள். சோழ மாளிகைக்குப் பின்புறத்தில் கடலைப் போல பரவி அலைமோதிக் கொண்டிருந்த ஓடையைத்தான். ஆனால் மாளிகைக்கு வெகு தூரம் மேற்கில் இருந்தது அத்துறை.

ஓடைக்கரையில் அடர்ந்த மரங்கள் பல இருந்தன.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## கலைமானும் கரடியும்

(நேற்றைய தொடர்ச்சி)

அதை நானும் ஒப்புக் கொள்கிறேன். அது மட்டுமல்லாது, என் நண்பன் மிகவும் அழகானவன் என்பதும் எனக்கும் தானே பெருமை ! என்றது பெருந்தன்மையுடன்.

ஆனால், உன்னை என் நண்பன் என்று சொல்லிக் கொள்வது எனக்கு அசிங்கமாக இருக்கிறது. நான் தனியாக வாழ முடிவு செய்து விட்டேன் என்று கூறியபடி கலைமான் அங்கிருந்து புறப்பட்டுப் போய் விட்டது. இது



நாள் வரை தன்னோடு ஒற்றுமையாக வாழ்ந்த மான், பிரிந்து போவதைக் கண்டு வேதனையில் துடித்தது கரடி. இருப்பினும் மனதை தேற்றிக் கொண்டது.

ஒரு நாள் கலைமான், இரை தேடுவதற்காக வெளியில் சென்றது. அப்போது மரம் ஒன்றில் இருந்த சிறுத்தை , கலைமானை வேட்டையாடத் துரத்தியது. சிறுத்தைக்கு பயந்து தலை தெறிக்க ஓடிய கலைமானின் தலை ஒரு மரத்தின் கிளைகளுக்கு இடையில் வசமாக மாட்டிக் கொண்டது. எவ்வளவு முயன்றும் அதன் தலை வெளியே வரவில்லை தன் முழுப் பலத்தினைக் கொண்டு கலைமான் தலையை வெளியே எடுக்க முயன்றது. இறுதியில் அதன் கொம்புகள் முறிந்து தலை வெளியே வந்தது.

கொம்புகள் ஒடிந்து போனதால் கலைமான் பார்ப்பதற்கே அசிங்கமாக தோற்றம் அழிந்தது. இதைப் பார்த்த மற்ற விலங்குகள் கேலி பேசி சிரித்தன. கலைமான் அழகிழந்து பழைய படி கரடியிடமே சென்றது. கரடியோ, கலைமானுக்கு நடந்ததைக் கேட்டு வருந்தியது.

மானே ! அழகு என்பது எப்போதும் நம்முடன் இருக்கப் போகிற சொத்தில்லை. வயதாக வயதாக அது நம்மை விட்டு விலகுவது உறுதி. உனக்குக் கொஞ்சம் விரைவாக போய்விட்டது. இதற்காக வருந்தாதே என்று கலைமானை தேற்றியது கரடி. கரடியின் பெருந்தன்மையைக் கண்டு வெட்கத்தில் தலைகுனிந்த கலைமான், அதனிடம் மன்னிப்பு கேட்டது. இருவரும் பழையபடி நண்பர்களாக வாழத் தொடங்கினர். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு செயல், அது செய்யத் தகுதி உள்ளதாக இருப்பின், அதை நன்றாகச் செய்து முடியுங்கள்.
~ ஆங்கில பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வெளிநாடுகளுக்குச் சென்ற ஜனாதிபதி ரணில் பிராயச்சித்த அபிஷேகம் செய்கிறார்

வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு வெளிநாட்டுத் தலைவர்களையும் ஐ.நா சபையின் பொதுச் செயலாளரையும் சந்தித்து வருகிறார்.

இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கருத்தியல் ஐ.நா சபையில் ஏற்பட்டுள்ள நிலையில், வெளிநாட்டுத் தலைவர்களையும் ஐ.நா சபையின் பொதுச் செயலாளரையும் சந்தித்து இலங்கையில் நடந்த போர்க்குற்றத்துக்காக பிராயச்சித்த அபிஷேகம் செய்து வருகிறார்.

ஆம், எதிர்வரும் ஜூலை மாதமளவில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் தீர்வு எட்டப்பட்டு விடும் என்று வெளிநாட்டுத் தலைவர்களிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதிமொழி வழங்கி வருகிறார்.

இவ்வாறு உறுதிமொழிகளை வழங்குவதன் ஊடாக, இலங்கைக்கு எதிராக ஐ.நா சபை எடுக்கக்கூடிய தீர்மானங்களைத் தணிக்கை செய்வதே அவரின் இலக்காக உள்ளதேயன்றி, அதிகாரப் பகிர்வுகளை வழங்குவதற்கான எந்த நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

அதேநேரம் இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் கலந்துரையாடுவதான அறிவிப்புகள் இன்னமும் முழுமை பெறவில்லை.

அதாவது, அரசியல் கட்சிகளுடனான சந்திப்புகள் அனைத்தையும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஏற்பாடுகள் போல காட்டுவது மட்டுமே நடந்தாகிறது.

மற்றும்படி இனப் பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை என்பதே யதார்த்தம்.

தவிர, இனப் பிரச்சினைக்கான தீர்வு நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னதாக எட்டப்பட்டுவிடும்.

75ஆவது சுதந்திர தினத்தைச் சிங்கள - தமிழ் மக்கள் சகோதரர்களாக நின்று கொண்டாடுவர் என பாராளுமன்றத்தில் வைத்துத் தெரிவித்தவர் ஜனாதிபதி ரணில்.

ஆனால் நடந்தது எதுவுமில்லை. நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்துக்கு (04.02.2023) முன்னதாக இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சாத்தியம் அறவே இல்லை என்ற உண்மையை அனைவரும் அறிந்திருந்த போதிலும் அந்த உண்மையை உணராதவராக ஜனாதிபதி ரணில் உறுதிமொழி வழங்கியிருந்தார்.

ஆக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உறுதிமொழிகள் அரங்கேறாதவை என்பதை இதிலிருந்து எவரும் புரிந்து கொள்ள முடியும்.

ஆகவே வெளிநாட்டுத் தலைவர்களிடம் ஜனாதிபதி ரணில் கூறுகின்ற அதிகாரப் பகிர்வு என்பது வெறும் வார்த்தை ஜாலமேயன்றி வேறில்லை.

ஆம், தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகளைக்கூட கட்டுப்படுத்த முடியாத அளவில்தான் ஜனாதிபதியின் நிலைமை உள்ளது.

அதாவது பௌத்த பீடங்கள் மற்றும் உச்சக்கட்டப் பேரினவாத அரசியல் தரப்புகள், இலங்கை பௌத்த சிங்கள நாடு என்ற வன்மத்தை தங்கள் மூளையில் ஏற்றி வைத்துள்ள சிங்கள புத்திஜீவிகள் என்ற பட்டாளம் அடங்கிய பெரும் மறைகரத்தைத் தாண்டி, இனப்பிரச்சினைக்கான தீர்வை எவ்ராலும் தந்துவிட முடியாது.

இங்குதான் சர்வதேச விசாரணையின் அவசியம் உணரப்பட வேண்டும்.

## சமுர்த்தி பயனாளிகள் பட்டியலில் விடுபட்டவர்கள் 30 வரை மேன்முறையீடு செய்யலாம்

### மன்னார் அரச அதிபர்

(மன்னார்)

நலன்புரி நன்மைகள் சபையினால் வெளியிடப்பட்டிருக்கும் புதிய சமுர்த்தி பயனாளிகளை அடையாளப்படுத்தும் மதிப்பீட்டு அறிக்கையில் மன்னாரில் விடுபட்ட, மற்றும் உள்வாங்கப்படாத பயனாளிகள் முன்னெடுத்த போராட்டம் நேற்று மதியத்துடன் முடிவுக்கு வந்துள்ளது.

மூன்றாவது நாளாகவும் நேற்றய தினம் காலை முதல் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் ஒன்று கூடி புதிய சமுர்த்தி பயனாளிகளை அடையாளப்படுத்தும் மதிப்பீட்டு அறிக்கையில் விடுபட்ட, மற்றும் உள்வாங்கப்படாத பயனாளிகள் நூற்றுக்கணக்கானவர்கள் ஒன்று கூடி போராட்டம் ஒன்றை முன்னெடுத்ததோடு, தமக்கு உரிய தீர்வு வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இதன் போது மாவட்டச் செயலக பிரதான வீதி பகுதியில் பொலிஸார் விசேட கடமையில் ஈடுபட்டனர். சிறிது நேரம் மாவட்டச் செயலகத்தினுள் மக்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. தமது தேவைகளை பூர்த்தி செய் மாவட்டச் செயலகத்திற்கு செல்ல இருந்தவர்கள் உள்ளே செல்ல முடியாத நிலையில் மாவட்டச் செயலகத்திற்கு முன் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் திடீர் என பிரதான வீதிகளை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து சேவைகள் சிறிது நேரம் பாதிப்படைந்திருந்தது.

அதனைத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் சிலரை அழைத்து அரசாங்க அதிபருடன் கலந்துரையாடல் இடம் பெற்றது. இதன் போது பொலிஸ் அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர். இதன் போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சார்பாக கலந்து கொண்டவர்கள் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறினர்.

குறிப்பாக நலன்புரி நன்மைகள் சபையினால் வெளியிடப்பட்டிருக்கும் பட்டியலில் பணம் வசதி உடைய மற்றும் மாடி வீடுகளில் வசிப்பவர்களும் உள்வாங்கப்பட்டு இருப்பதாகவும் ஆனால் தேவையுடைய மாற்றுத்திறனாளிகள், விதவ்வகள், சிறுநீரக நோயாளிகள், சொந்த வீடு இல்லாதவர்கள், உட்பட பலரின் பெயர் உள்ளடக்கப்படவில்லை எனவும் குறித்த பட்டியல் பொருத்தமற்றது என தெரிவித்தனர்.

இதன் போது பதில் வழங்கிய அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேல் குறித்த திட்டம் நாடு முழுவதும் ஒரு திட்டத்தினுள் கொண்டு வரப்பட்டுள்ளது. உங்கள் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படாத அல்லது நிராகரிக்கப்பட்டுள்ளவர்கள் மேன்முறையீட்டுக்கு விண்ணப்பிக்க முடியும். குறித்த மேன்முறையீட்டு விண்ணப்பம் இம்மாதம் 30 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும்.

பிரதேச செயலகங்களில் இதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஒரு திட்டத்தினூடாக முன்னெடுக்கப்பட்டுள்ளமையினால் என்னால் அல்லது பிரதேச செயலாளரினாலோ எதுவும் செய்ய முடியாது. இந்த நிலையில் உங்கள் பிரச்சினையை சமர்ப்பிப்பதற்கு எதிர்வரும் 30 ஆம் திகதி வரை சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த விசாரணைக் குழு உங்கள் மேன்முறையீட்டு விண்ணப்பத்தை பரிசீலனை செய்து உங்களிடம் விசாரணைகளை மேற்கொள்வார்கள். அதன் பின்னரே தெரிவு பட்டியலில் தகுதி உள்ளவரா? இல்லையா? என்ற தெரிவு இடம்பெறும். அதன் பின்னர் இறுதி தெரிவு பட்டியல் அனுப்பப்படும். தற்போது இணையத்தில் வெளிவந்துள்ள பெயர்ப்பட்டியல் இறுதி பட்டியல் இல்லை எனவும் தெரிவித்தார். (4-7,285)

## சமுர்த்தி பயனாளிகளிடம் நிதி சேகரிக்க வேண்டாம்

### அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி பயனாளிகளிடம் மது ஒழிப்பு, கொடி வாரம் என நிதி சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பிரதேச செயலர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமுர்த்திப் பயனாளிகளிடம் கொடி வாரம் மது ஒழிப்பு வாரம் என ஒவ்வொரு வருடமும் நிதி சேகரிப்பு நடவடிக்கைகள் இடம் பெறுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

சமுர்த்தி பயனாளிகளிடம் குறித்த விடயங்களுக்காக நிதிசேகரிக்கும் போது அதனை அவர்கள் வழங்காது விட்டால் சமுர்த்தி நிறுத்தப்படும் என்ற மன உணர்வு அவர்களுக்கு ஏற்படக்கூடும்.

இல்லாவிட்டால் நிதி சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் நிதி தராவிட்டால் சமுர்த்தி நிறுத்தப்படும் என்ற அச்சுறுத்தல்களை விடுப்பதற்கும் சந்தர்ப்பங்கள் உண்டு.

மேலும் யாழ் மாவட்டத்திலுள்ள சமுர்த்தி பயனாளிகள் தெரிவில் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்ற நிலையில் சமுர்த்திப் பயனாளிகள் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

ஆகவே இனி வரும் காலங்களில் சமுர்த்தி பயனாளிகளிடம் சமூக மட்ட நிகழ்வுகளுக்கான நிதிகளை சேகரிக்க வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்தார். (4-7,33)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை** யாழ். பிரதேசத்தில் பிரதிப்பொதுமுகாமையாளர் அலுவலகம் - மின்சாரசபை, ஆளுநர்விடுதி, யாழ்.மாவட்ட செய லகம், துளசிமஹால், யு.எஸ் விடுதி மருத்துவமனை வீதி, கச்சேரி நல்லூர்வீதி, முலவை ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் கனகராயங்குளம், ஆலங்குளம் (புதுவிளான்), கறுப்புக்குத்தி இராணுவமுகாம், குறிசுட்டான்குளம், பரசங்குளம், புதூர்கோவிலடி, புத்தூர்கோபுரம், புதுக்குளம், புதூர் கிராமம், புது விளாங்குளம் சிவன் கோவில், விக்னகுளம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் எல்லப் பர்மருதங்குளம், ஆசிக்குளம், கற்குளம் (சிதம்பரபுரம்), கூமரசங்குளம் மாதாகோவிலடி ,கோவில்குளம் 10ம் ஒழுங்கை, மதுரநகர் கல்நாட்டின குளம். பெரிய கூமரசங்குளம், ... சிதம்பரபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## கனேடிய லொத்தர் சீட்டிழுப்பில் 800 கோடி வென்ற இலங்கையர்

கனடாவில் இலங்கையை சேர்ந்த ஒருவர் சுமார் 35 மில்லியன் கனேடிய டொலர்களை பண்பரிசாக வென்றெடுத்துள்ளார்.

ஒன்ராரியோவின் விண்ட்ஸோர் பகுதியைச் சேர்ந்த ஜயசிங்க என்ற இலங்கையரே லொட்டோ மெக்ஸ் லொத்தர் சீட்டிழுப்பில் 35 மில்லியன் கனேடிய டொலர்களை (இலங்கை மதிப்பில் 800 கோடி) பரிசாக வென்றெடுத்துள்ளார்.

கனடாவிற்கு குடிபெயர்ந்ததன் பின் ஜயசிங்க அடிக்கடி லொத்தர் சீட்டு கொள்வனவு செய்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜாக்பொட் பரிசுத் தொகை அதிகமாக காணப்படும் சந்தர்ப்பங்களில் மட்டும் அவர் லொத்தர் சீட்டு கொள்வனவு செய்வார் என தெரிவிக்கப்படுகின்றது.

மகளின் கல்விக்காக செலவிட உள்ளதாகவும் கார் கொள்வனவு செய்யவும், பல்வேறு இடங்களுக்கு பயணம் செய்யவும், அறக்கட்டளைகளுக்கு வழங்கவும், நாட்டில் உள்ள உறவினர்களை சந்திக்கவும் தாம் இந்த பரிசுத் தொகையை பயன்படுத்த உள்ளதாக ஜயசிங்க தெரிவித்துள்ளார். (4-7)

## விழித்திரை சத்திர சிகிச்சைகள் யாழ்.போதனாவில் ஆரம்பம்

### பணிப்பாளர் சத்தியமூர்த்தி

யாழ்.போதனா வைத்தியசாலையில் விழித்திரை சத்திர சிகிச்சைகள் மீண்டும் ஆரம்பம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் அவர் குறிப்பிட்டுள்ளதாவது, விழித் திரை சத்திர சிகிச்சை ஆனது சத்திர சிகிச்சை நிபுணர் இல்லாத காரணத்தினாலும் சத்திர சிகிச்சைக்கு தேவையான பொருட்கள் இல்லாத காரணத்தினாலும் கடந்த 2 வருடங்களாக நடை பெறவில்லை.

இந்நிலையில் தற்பொழுது விழித்திரை சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ஷைலா பரதன் பதில் கடமையேற்றுள்ளார்.

அவர் தமது சேவையினை மக்களுக்கு வழங்கும் முகமாக வாரத்துக்கு ஒருமுறை ஆறு பேர் வீதம் 100 சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள உள்ளார்.

ALAKA Foundation, Malaysia நிறுவனத்தின் நிதி பங்களிப்பில் இந்நிகழ்ச் சித்திட்டமானது யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றார். (4-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘டைட்டன்’ நீர்மூழ்கியில் சென்ற ஐவரும் உயிரிழப்பு

### சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியீடு

**அட்லாண்டிக் கடலில் மூழ்கிய நிலையில் தேடப்பட்டுவந்த ‘டைட்டன்’ நீர்மூழ்கி கப்பலில் பயணித்த ஐவரும் உயிரிழந்துள்ளதாக அமெரிக்க கரையோர படையினரை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



கடலில் மூழ்கிய, டைட்டானிக் கப்பலை பார்வையிடுவதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை டைட்டன் நீர்மூழ்கி கப்பலின் பாகங்கள் என சந்தேகிக்கப்படும் பாகங்கள் சுமார் 1600 அடி ஆழத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

குறித்த விபத்தின் மூலம் நீர்மூழ்கி கப்பல் வெடித்திருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

இந்நிலையிலே நீர்மூழ்கி கப்பலில் பயணித்த ஐவரும் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் குறித்த ஐவரது உடல்களையும் மீட்க முடியும் என தற்போதைக்கு கூற முடியாதுள்ளதாகவும் கரையோர பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இதை அடுத்து காணாமல் போன நீர்மூழ்கி கப்பலை கண்டுபிடிப்பதற்காக பல்வேறு நாடுகளை சேர்ந்த கப்பல்கள், விமானங்கள் மற்றும் நீர்மூழ்கி வாகனங்கள் போன்றவை களமிறக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கை தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் டைட்டானிக் கப்பலின் அருகே உள்ள சுற்றுப் பகுதியில் சிதைந்த நீர்மூழ்கி கப்பலின் குப்பை கூளங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டவை, எத்தகைய குப்பை கூளம் என்பது குறித்து நிபுணர்கள் ஆராய இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (நி)

# அமெரிக்காவை தாக்கிய சூறாவளி 4 பேர் உயிரிழப்பு, 10 பேர் படுகாயம்



(வோஷிங்டன்)

தெற்கு அமெரிக்க மாநிலமான டெக்ஸ்மாநிலத்தில் சக்தி வாய்ந்த சூறாவளி தாக்கியதில் சுமார் நான்கு பேர் உயிரிழந்துள்ளதுடன், 10 பேர் படுகாயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த சூறாவளி நேற்று முன்தினம் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சூறாவளியால் கட்டடங்கள் கடுமையாகச் சேதமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் டெக்சஸில் கடந்த புதன்கிழமை சுமார் நான்கு சூறாவளிகள் பதிவாகியுள்ளன. மழை மற்றும் பலத்த காற்று மாநிலத்தின் சில நகரங்களையும் தாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# செயற்கை இறைச்சிக்கு அமெரிக்கா அனுமதி

(வோஷிங்டன்)

கொழுப்பு, எலும்பு இல்லாமல் ஆய்வகத்தில் தயாரிக்கப்படும் கோழி இறைச்சியை மக்களுக்கு விற்பனை செய்ய அமெரிக்கா அனுமதி அளித்துள்ளது.

கோழியைக் கொல்லாமல், அதன் இறைச்சியிலோ அல்லது கருமுட்டையில் இருந்தோ பிரித்தெடுக்கப் படும் செல்களுக்கு ஊட்டச் சத்து செலுத்தி உருவாக்கப் படும் இவ் இறைச்சியானது முதன்முதலில் சிங்கப்பூரில் விற்பனைக்கு வந்து நல்ல வரவேற்பை பெற்றது.

இதனையடுத்தே தற்போது அமெரிக்க அரசும் அதனை உற்பத்தி செய்து விற்க 2 நிறுவனங்களுக்கு அனுமதி அளித்துள்ளது.

எவ்வாறு இருப்பினும் குறித்த இறைச்சி ஆய்வகத்தில் வளர்க்கப்பட்டது என்பதை வாடிக்கையாளர்களிடம் தெரியப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

செயற்கை இறைச்சிக்கான உற்பத்திச் செலவு அதிகம் என்ற போதிலும் அதனை வாங்க நட்சத்திர விடுதிகள் ஆர்வம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சீரற்ற காலநிலை காரணமாக விமானப் போக்குவரத்து இடைநிறுத்தம்

(ஆம்ஸ்டர்டாம்)



நெதர்லாந்தின் பல பகுதிகளில் கடந்த சில நாட்களாக பலத்த இடி மின்னலுடன் கனமழை பெய்து வருகிறது.

இதனால், அவசியமின்றி வீட்டினை விட்டு வெளியேற பொதுமக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வானிலை மையத்தின் எச்சரிக்கை காரணமாக ஆம்ஸ்டர்டாம் சர்வதேச விமான நிலையத்தில் விமான போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டி இருந்த 37 இற்கும் மேற்பட்ட சர்வதேச விமானங்களின் பயணங்கள் இரத்து செய்யப் பட்டுள்ளன.

மேலும் ஆம்ஸ்டர்டாம் வரக்கூடிய சர்வதேச விமானங்களின் சேவையை இரத்து செய்து அண்டை நாடுகளுக்கு திருப்பி விடப்பட்டுள்ளன.

நிலைமை சீராகும் வரை இந்த நடவடிக்கை தொடரும் என அந்த நாட்டின் விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது. (நி)

# உலகளாவிய குற்றவாளிகள் பட்டியலில் ரஷ்யாவை சேர்த்த ஐ.நா

(ஜெனீவா)

ஐக்கிய நாடுகள் சபை ரஷ்யாவின் ஆயுதப் படைகளை உலகளாவிய குற்றவாளிகளின் பட்டியலில் சேர்த்துள்ளது.

இது குறித்து ஐ.நா வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த ஆண்டு உக்ரைனில் 136 குழந்தைகள் கொல்லப் பட்டுள்ளதாகவும் 518 குழந்தைகள் அங்கவீனர்களாகியதாகவும் மருத்துவமனைகள் மீது 480 தாக்குதல்களை நடத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தொண்ணூற்றொரு குழந்தைகள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உக்ரைனும் போரில் 80 குழந்தைகளை கொன்றுள்ளது. 175 குழந்தைகள் காயப்படுத்தப் பட்டுள்ளனர்.

212 மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்தியது. இருப்பினும் உக்ரைன் குற்றவாளிகள் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 160 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 180 |
| பச்சைமிளகாய் | 550 | 500 | 600 |
| தக்காளி | 250 | 300 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 220 | 240 |
| கோவா | 280 | 250 | 250 |
| கரட் | 300 | 400 | 420 |
| பூசணி | 100 | 80 | 100 |
| புடோல் | 150 | 140 | 180 |
| வாழைக்காய் | 100 | 180 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 250 | 420 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 140 |
| பாகற்காய் | 500 | 400 | 400 |
| வெண்டக்காய் | 280 | 160 | 120 |
| கருணைக் கிழங்கு. | 160 | 200 | 200 |
| பயற்றங்காய் | 450 | 400 | 350 |
| லீக்ஸ் | 360 | 300 | 350 |
| பீற்றூட் | 450 | 350 | 200 |
| கறிமிளகாய் | 400 | 360 | 350 |
| முருங்கைக்காய் | 600 | 800 | 600 |
| போஞ்சி | 550 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | — |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 60 |
| தேசிக்காய் | 350 | 350 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 80 | 75 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 400 |
| முள்ளங்கி | 140 | 160 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 |
| வல்லாரை | 50 | 35 | 40 |
| ஈரப்பலா | 180 | 200 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுர்த்தி...

உத்தியோகத்தர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பணியாற்றும் சில சமுர்த்தி உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் எனக்கு நேரடியாக முறைப்பாடுகள் வருகிறது.

அரச உத்தியோகத்தர்கள் தமக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களை உரிய வகையில் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்.

அதனை விடுத்து பணியாற்றும் பகுதிகளில் தம்து அரச பணியை அபகீர்த்திக்கு உள்ளாக்கும் வகையில் செயற்பாடுகளை மேற்கொள்வதை அனுமதிக்க முடியாது.

ஆகவே குறித்த விடயம் தொடர்பில் அரச சேவை ஒழுங்காற்று விதிகளுக்கு அமைய சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள தயங்கமாட்டேன் தொப்பி அளவானவர்கள் .மட்டும் போட்டு கொள்ளவும் என தெரிவித்தார். (4-7,104)

## பிரபாகரனுக்கு...

அறிக்கை வெளியிடுவதற்கும் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கும் என்ன சம்பந்தம் உள்ளது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், ஊடகவியலாளர் ஒருவரினால் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் குறித்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க நாட்டின் பாதுகாப்பு அமைச்சு, இராணுவ தலைமையகம் மறுப்பு தெரிவித்தது.

இந்நிலையில்பிரபாகரனின்மரபணுப் பரிசோதனைக்காக அவரின் குடும்ப உறுப்பினர்களிடம் இருந்து மாதிரிகள் பெறப்பட்டதா என, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் பிரபாகரனின் நெருங்கிய உறவினருமான எம்.கே. சிவாஜிலிங்கத்திடம் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உயிரிழந்ததாக கூறப்பட்ட பின்னர், உயிரிழந்தது அவர் தான் என்பதை உறுதிப்படுத்துவதற்காக அவரின் உடலை தாங்கள் மரபணுப் பரிசோதனை செய்து உறுதிப்படுத்தினோம் என்று யுத்தம் முடிந்த ஓரிரு நாட்களில் அரசாங்கம் அறிவித்திருந்தது.

2009ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் மரபணுப்பரிசோதனை செய்து கொள்வதற்கான வசதிகள் இருந்திருக்கவில்லை. இந்தியாவின் ஐதராபாத்திலும் சிங்கப்பூர் போன்ற இடங்களில்தான் அந்த வசதி இருந்ததாக நாங்கள் அறிந்து கொண்டோம்.

ஆகவே யுத்தம் முடிந்த ஓரிரு நாட்களில் மரபணுப் பரிசோதனை செய்ததாக பொய்யான தகவலை அரசாங்கம் வெளியிட்டிருந்தது.

அரசாங்கம் பச்சைப் பொய்யை சொல்லுகின்றது. ஒரு பிரேத பரிசோதனை நடத்தப்படவேண்டும் என்றால், சட்ட வைத்தியஅதிகாரி முன்னால்தான் நடத்தப்பட வேண்டும். ஆனால் அவ்வாறான ஒன்று நடந்ததாக அரசாங்கம் இதுவரை கூறவில்லை.

அதைவிட ஒரு நீதிபதி முன்னால்தான் மரண விசாரணை நடைபெற வேண்டும். நீதிபதிதான் பிரேத பரிசோதனை நடத்துவதற்கான உத்தரவை வழங்க வேண்டும். அவ்வாறான எதுவும் இங்கு நடக்கவில்லை எனத் தெரிவித்தார். (4-7)

## மன்றுக்கு...

கள் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மட்டுமே நீதிமன்றில் சமுகமளித்திருந்தார்.

ஏனைய பிரதிவாதிகள் மன்றுக்கு சமுகமளிக்காத காரணத்தினால் கட்டளையை வழங்க முடியாதுள்ளதாக நீதவான் ஏ.ஆனந்தராஜா தெரிவித்ததோடு எதிர்வரும் தவணைக்கு வருகை தராத பிரதிவாதிகளுக்கு பிடியாணை பிறப்பிக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்தார்.

குறித்த வழக்கில் பிரதிவாதிகளாக பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், சாள்ஸ் நிர்மலாதன், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ்.மாநகர முன்னாள் மேயர் வி.மணிவண்ணன் மற்றும் வேலன் சுவாமிகள் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7,33)

## தமிழ் அரசியல்...

கொலை குண்டுத் தாக்குதலின்போது, விடுதலைப் புலிகள் உறுப்பினருக்கு ஆதரவு வழங்கியதாக கூறப்படும் கனகசபை தேவதாஸனுக்கு 2017 ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் பியசேன ரணசிங்க 20 ஆண்டுகள் கடூழிய சிறை தண்டனை விதித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டு இருந்த கனகசபை தேவதாஸன், தன்னை விடுவிக்குமாறு கோரியும், தனது வழக்கிற்கான ஆதாரங்களை திரட்ட தன்னை பிணையில் விடுவிக்குமாறு கோரியும்பல உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தியிருந்தார். அத்துடன் தனக்காக தானே சில வழக்கு தவணைகளில் வாதாடி இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (4-7)

## கொழும்பில்...

வயதுடைய எஸ்.சஞ்சீவ என்ற நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே அவரைச் சுட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளனர் என்று சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வரும் பொலிஸார் தெரிவித்தனர். (4-7)

## சாரதியையும்...

காப்புக் காடு பகுதியில் மணல் கடத்தல் இடம் பெறுவதாக கிடைத்த தகவலையடுத்து கிளிநொச்சி பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கடந்த புதன் கிழமை காலை சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

பொலிஸ் குழுவினர் காப்புக் காட்டுக்குள் பிரவேசித்தபோதும், காப்புக் காட்டுக்குள் மணல் ஏற்றப்பட்ட டிப்பர் வாகனம் ஒன்று இருந்ததை யடுத்து, மணல் ஏற்றி வந்த டிப்பர் வாகனத்தின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

டிப்பர் வாகனத்துடன் சாரதியை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற போதே மற்றுமொரு டிப்பர் வாகனத்துடன் வீதியை மறித்த சிலர் சந்தேக நபரை மணல் லொறியுடன் அழைத்துச் செல்வதை அனுமதிக்க முடியாது என தெரிவித்தனர்.

அப்போது, பொலிஸார் சிவில் உடையில் இருந்ததால், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், தான் பொலிஸ் என கூறி, வீதி மறியலில் ஈடுபட்டவர்களிடம் அடையாள அட்டையை காட்டினார்.

அங்கு, பொலிஸ் உத்தியோகத்தரின் அடையாள அட்டை மற்றும் அவரது கையிலிருந்த கைப்பேசி என்பன தூக்கி எறியப்பட்டு, சந்தேக நபருடன் டிப்பர் வாகனத்தையும் ஆறு பேர் கொண்ட குழுவினர் கடத்திச் சென்றுள்ளனர்.

பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (4-7)

## பிரதமர்...

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமர் பதவிக்கு போட்டியிடமாட்டார் என பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய இராஜாங்க அமைச்சர், மகிந்த ராஜபக்ஷ நாட்டுக்கு தேவையானதைவிட அதிகமாக செய்துள்ளார்.

தற்போது முன்னாள் ஜனாதிபதி தனது ஓய்வு காலத்தை அனுபவிக்க வேண்டிய தருணம் இது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (4-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 23/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1609
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 0 9 7 9 1 5
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.06.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1184
R 03 47 57 60
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.06.23 | சீட்டிழுப்பு இலக்கம் 3396
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
S 11 17 38 59
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 23/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1502
வெற்றி எழுத்து J | சுப்பர் இலக்கம் 04 | வெற்றி இலக்கங்கள் 51 61 74 75

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.23
சீட்டிழுப்பு இலக்கம் 463
கடகம் 14 19 32 45 கடகம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/06/23
சீட்டிழுப்பு இலக்கம் 5154
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்
Y 5 4 9 9 0 7
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2128 | நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.06.23 | தினம் வெள்ளிக்கிழமை
Q 40 45 47 57
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,869,500/-
DLB

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி:2023.06.23
வெற்றி வாரம்: 4289
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,490,122.60
வெற்றி இலக்கங்கள் 18 27 34 70 | ஆங்கில எழுத்து Q
DLB

சசிரி
வெற்றி வாரம் 340
சீட்டிழுப்பு திகதி 2023.06.23
பச்சை
வெற்றி இலக்கங்கள் 01 05 17
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,857,000/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 2,206,346.20
திகதி 2023-06-23
வெற்றி வாரம் 3840
வர்ணம் கரும் நீலம்
வெற்றி இலக்கங்கள் 13 19 36 46 | கன்னி
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,115,166.20/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 40 19 24 68 76
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 340,252,748.60
1304
ஊதா
2023.06.23
வெள்ளி
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அட கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 1954
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2023.06.23
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.53,270,233.60
வெற்றி இலக்கங்கள் 16 33 56 57 | ஆங்கில எழுத்து L
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானுக்கு தேயிலை கொடுத்து எண்ணெய் வாங்கும் இலங்கை

(கொழும்பு)

இலங்கை, ஈரானுடன் 250 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான எண்ணெய்க்காக தேயிலையை வழங்கும் பண்டமாற்றுச் சேவையை அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கவுள்ளது.

ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை இதனைத் தெரிவித்துள்ளது.

2012இல் இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய்க்காக 2021இல் இந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.

எனினும், கடந்த ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட டொலர் தட்டுப்பாடு, பொருளாதாரத்தை மூழ்கடித்தமை காரணமாக இதன் நடைமுறை தாமதமானது.

இந்தநிலையில், தற்போது ஈரான் மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளும் டொலர்களை நம்பாமல் வர்த்தகம் செய்யலாம் என்று இலங்கை தேயிலை சபையின் தலைவர் நிராஜ் டி மெல் ரொய்ட்டர்ஸிடம் தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஒவ்வொரு மாதமும் 5 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான தேயிலையை 48 மாதங்களுக்கு அனுப்புவது என்பது உடன்படிக்கையாகும்.

எனினும், மாதத்திற்கு சுமார் 2 மில்லியன் டொலர்களில் இருந்து ஆரம்பிக்கவுள்ளதாக நிராஜ் டி மெல் குறிப்பிட்டுள்ளார். (4,7)

# அதிகரிக்கும் மருத்துவர் பற்றாக்குறை ஸ்தம்பிதமடையப் போகும் சுகாதாரத் துறை

## மருத்துவ வல்லுநர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை தற்போது மருத்துவ நிபுணர்களுக்கான பாரிய பற்றாக்குறையை சந்தித்துள்ளது எனவும் நாட்டின் சுகாதாரத் துறைக்கு இது கடுமையான அச்சுறுத்தலாக இருப்பதாகவும் மருத்துவ வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கணிசமான எண்ணிக்கையிலான மருத்துவ நிபுணர்கள் வெளிநாடுகளுக்கு செல்லுதல், சில நிபுணர்கள் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கு உள்வாங்கப்படுதல், அத்தோடு சமீபத்தில் அரசு வெளியிட்ட சுற்றறிக்கை பிரகாரம் ஓய்வு பெறும் வயது 60 என அறிவிக்கப்பட்டமை என்பன இந்த விடயத்தில் தாக்கம் செலுத்தும் காரணிகளாக அமைந்துள்ளன.

2024 ஆம் ஆண்டிற்குள் நாட்டிற்கு 4,299 விஷேட மருத்துவ நிபுணர்கள் தேவைப்படுவதாக சுகாதார அமைச்சு மதிப்பிட்டுள்ளது.

இடமாறுதல் பட்டியலின் படி, இருதயநோய் நிபுணர்கள், நுண்ணுயிரியல் நிபுணர்கள், தோல்நோய் நிபுணர்கள், அவசரகால மருத்துவர்கள், மயக்கவியல் நிபுணர்கள் மற்றும் நோயியல் நிபுணர்கள் உட்பட 750 பணியிடங்கள் இந்த ஆண்டுக்குள் அவசரமாக நிரப்பப்படவேண்டியுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

அதிகாரிகள் உடனடியாகச் செயல்படத் தவறினால், அடுத்த ஆண்டுக்குள் தேவைப்படும் மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கை 1,000 இற்கும் அதிகமாகும் என்று இந்தத் துறையில் உள்ள வல்லுநர்கள் நீண்டகாலமாக எச்சரித்து வருகின்றனர்.(4-7)


## தேவை

எமது சிறுவர் இல்லத்திற்கு
செஞ்சோலை சிறுவர் இல்லம் (கிளிநொச்சி)

01.பராமரிப்பாளர்
02.முகாமையாளர்
03.சாரதி (Bus,Auto ஓட்டுனர்கள்)

உடன் தொடர்பு கொள்ளவும் !!!
(16074)
071 535 4500

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

MD90 - HGNP 4449
மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
சி.மகாலிங்கம்
கொற்றாவத்தை
(C-6808)
077 554 6963

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...

கட்டணம் - 2800/=
(16033)
T.P:077 544 8503

## United Hospitality and Tourism College

கற்கைநெறிகள் 29.06.2023 முதல் ஆரம்பம்
20 % Discount

- Hotel Management - NVQ-Level-3
- IELTS
- Spoken English Classes
- குழு மற்றும் தனிப்பட்ட ஆங்கில வகுப்புக்கள்

03 மாத காலப் பகுதியில் உங்களுடைய ஆங்கில புலமையை சரளமாக பேசுவதற்கான உத்தரவாதம்

உங்களுடைய வெளிநாட்டு கனவுகளை நனவாக்குவதற்கு எங்களுடன் இணையுங்கள்

- எளிய தவணை ரீதியான கட்டண முறை
- உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற கற்கைநெறி
- 80% செயல்முறை வகுப்புக்கள்
- கல்வி கற்கும் பொழுது பகுதி நேர வேலை வாய்ப்புக்கள்.

(16030)
T.P : 077 638 3703, 075 430 3350
No- 86 1/2, Saikoddam, Navalar Road, Jaffna.

## காணி விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் வீதி,தாவடி வடக்கில் 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
(16078)
077 255 0807

## English Classes

Gr 1 to O/L
Grammar with Spoken
வீடு வந்து கற்பிக்கப்படும்.
(16058)
077 331 4608
யாழ்ப்பாணம்

## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு
கொத்து,றைஸ் உதவியாளர்கள் உடன் தேவை.
(16069)
தங்குமிடம், உணவு இலவசம்
077 629 0894
072 629 0891

## காணி விற்பனைக்கு

மாதகல் ஞான சிந்தாமணிப் பிள்ளையார் கோவில் (வன்னியர்) அருகில் அமைந்துள்ள 13 பரப்பு பனைகளுடன் கூடிய காணி உடன் விற்பனைக்கு
(16066)
தரகர் தேவையில்லை
074 020 6158

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(16076)
076 733 6047
076 755 8606
076 911 9371

## வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம்

NPTA
வருடாந்த பொதுக்கூட்டம் (AGM) 2023
திகதி/ நேரம் - 26.06.2023 / 6pm
இடம் - TILKO CITY HOTEL JAFFNA
நுழைவு - ரூபா 3000/=
(இரவு போசனம் உட்பட)
அங்கத்துவம் - சுற்றுலாத்துறை வர்த்தக உரிமையாளர்கள்

அங்கத்தவர்களுக்கு பிரத்தியேகமாக அரச, தனியார், வங்கி கடன்கள் முதலீடுகள் மேலும் பல சேவைகள் பெற்றுத்தருவதற்கான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.
யாழ்ப்பாண விமான நிலையம் காங்கேசந்துறைமுகம் ஆகியவற்றில் எமது முகவர் நிலையங்களை அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
தேவையின் அடிப்படையில் நிகழ்விற்கு வருபவர்களுக்கு யாழ் நகரில் இலவச தங்குமிட வசதிகள் செய்து தரப்படும். (C-6802)
021 222 4550
077 730 4545

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport உடையோருக்கு
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
(C-6807)


COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6807)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org